மைராவணன் வதை

கும்மி இன்னிசை

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக
சென்னை பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பாளர்
சே. சீனிவாசன்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005.
மே – 2004.

மைராவணன் வதை

கும்மி இன்னிசை

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக
சென்னை பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பாளர்

சே. சீனிவாசன்

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை – 600 005.

மே – 2004.

முனைவர் வீ. அரசு
துறைத்தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப்பல்லைகக் கழகம்
மெரினா வளாகம்
சென்னை –600 005

மேற்பார்வையாளர் சான்றிதழ்

மைராவணன் வதை என்னும் பொருண்மையில் அமைந்த தாள் சுவடியை சுவடியியல் மற்றும் பதிப்பியல் என்னும் பட்டயம் பெறுவதற்காக செல்வன் **சே. சீனிவாசன்** அவர்கள் எனது மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும் இப்பதிப்பு இவரது சொந்த முயற்சியில் உருவானதுயென்றும் சான்றிதழ் அளிக்கிறேன்.

இடம் : சென்னை
நாள்: –06–04

முனைவர் வீ. அரசு
மேற்பார்வையாளர்

சே. சீனிவாசன்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்லைகக்கழகம்
மெரினா வளாகம்
சென்னை – 600 005.

பதிப்பாளர் உறுதிமொழி

மைராவணன் வதை என்னும் பொருண்மையில் அமைந்துள்ள தாள் சுவடியை சுவடியியல் மற்றும் பதிப்பியல் என்னும் பட்டயத்திற்காக சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் இலக்கியத்துறை தலைவர் **முனைவர் வீ. அரசு** ஐயா அவர்களின் மேற்பார்வையில் பதிப்பு பணி செய்து அளிக்கும் இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

இடம் : சென்னை
நாள்: –06–04

சே.சீனிவாசன்
பதிப்பாளர்

உள்ளடக்கம்

	பக்கம்
நன்றியுரை	
பதிப்பு முன்னுரை	
கதைச் சுருக்கம்	
மைராவணன் வதை	1-56
பாடல் முதற்குறிப்பு அகராதி	57-61
அருஞ்சொற்பொருள் விளக்கம்	62-63

நன்றியுரை

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயக் கல்வியைத் தொடங்கி சுவடித்துறையில் புதுமை செய்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் பயில்வதற்கு வாய்ப்பு நல்கிய தமிழ் இலக்கியத்துறைக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பட்டய கல்வியை நடத்திய தமிழ் இலக்கியத் துறைக்கும், பாடம் நடத்திய பேராசியரியர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"மைராவணன் வதை" என்னும் பொருண்மையில் அமைந்த தாள்சுவடியை பதிப்பிக்கும் பொருட்டு நகலெடுக்க அனுமதி வழங்கிய சென்னை அரசினர் கீழ்த்திசை சுவடி நூலக காப்பாட்சியாளர் திரு.எஸ். சௌந்தரபாண்டியன் ஐயா அவர்களுக்கும், மற்றுமுள்ள அலுவலர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பதிப்பின் போது எழுந்த ஐயங்களை தெளிவித்த மேற்பார்வையாளர் முனைவர். வீ. அரசு, (தமிழ் இலக்கியத் துறை) அவர்களுக்கும் என் நன்றி.

(சே. சீனிவாசன்)

பதிப்பு முன்னுரை

இராமாயணம் மகாபாரதம் என்னும் இரு மாபெரும் இதிகாசங்களுள் தமிழக மக்களால் பண்டு தொட்டுப் பாடப்பெற்றும், படிக்கப் பெற்றும், வாய்மொழிக் கதையாக வழங்கப்பட்டும் வந்துள்ளன. கிளைக்கதைகளால் அமைந்த இந்த இரண்டு இதிகாசங்களுள் இராமாயணத்தின் கிளைக் கதையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இலக்கியமே **"மைராவணன் வதை"** என்னும் கும்மி இசை இலக்கியமாகும்.

நூல்

"மைராவணன் வதை" என்னும் இலக்கியத்தில் வரும் மைராவணன் பற்றியக் குறிப்பு இராமாயணக் கதையில் காணப் பெறவில்லை. ஆனால் இக்கிளைக் கதை மைராவணனை இராவணன் தம்பியாகவும், அவன் இராமன் இலக்குமணரை எதிர்த்துப் போரிடும் பாத்திரமாகவும் அமைத்துக் கூறுகிறது.

"மைராவணன் வதை" என்னும் இக்கதை தமிழில் உரைநடை, கும்மி, நாடகம், கதை, கூத்து, வாய்மொழி மரபு போன்ற பல வடிவங்களில் காணப்பெறுகிறது. இத்தாள்சுவடியில் அமைந்த மைராவணன் வதை கும்மி இசைப் பாடல்களால் அமைந்து காணப்பெறுகிறது.

நூல் அமைப்பு

"மைராவணன் வதை" என்னும் இந்த இலக்கியம் கடவுள் வாழ்த்தில் (விநாயகர்) தொடங்கி 275 பாடல்களால் பொருண்மை அமைந்து, ராமச்சந்திரனை வாழ்த்தி முடிகிறது.

பாடல்கள் கும்மி இன்னிசையால் அமைந்தும், சந்த அமைதி கொண்டும், இனிய, எளிய சொற்களால் அமைந்தும் காணப்பெறுகிறது. பாடல்களில் வடமொழிச் சொற்கள் அமைந்தும், எழுத்துப் பிழைகள் கொண்டும், எழுத்துப் பிழைகள் திருத்தப் பெற்று இப்பதிப்பு அமைகிறது.

நூலாசிரியர்

"மைராவணன் வதை" என்னும் இந்த கும்மி இன்னிசையால் அமைந்த இந்த இலக்கியத்தை நமக்களித்த தண்டமிழ்ப் புலவர் பெயர் தெரியவில்லை என்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

பதிப்பு மூலம்

"மைராவணன் வதை" என்னும் இத்தாள் சுவடி அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக சுவடி விளக்க அட்டவணை ஆர்.எண்.6834 என்ற எண்ணில் மைராவணன் வதை (கும்மி இன்னிசை) என்னும் தலைப்பில் காணப்பெறுகிறது. இத்தாள் சுவடி எம்.ஆர். சிவப்பிரகாசம் பிள்ளை அவர்களால் 17.8.1957

அன்று தொடங்கி 19.8.1957 முடிய எழுதப் பெற்றதாகும். இந்த தாள் சுவடியின் மூலப் பிரதியில் உடுமலைப் பேட்டையில் பிரபல வக்கிலாக இருந்த கிருணஷ்ண ஐயரின் பௌத்தராகிய கொச்சி ராஜியம் வக்கில் வி.எஸ். கிருஷ்ணசாமி ஐயருக்கு சொந்தமானது என்னும் குறிப்பு காணப்படுகிறது.

மைராவணன் வதை சுவடி காணப்பெறும் இடங்கள்

1. மாயாராவணன் கதை (மயில் ராவணன் கதை),
   தஞ்சை சரஸ்வதி மஹால் நூல்நிலையம்.

2. மைராவணன் வதை (கும்மி இன்னிசை),
   அரசினர் கீழ்த்திசை சுவடி நூலகம்,
   சென்னை.

3. மயில் ராவணன் நாடகம்,
   அரசினர் கீழ்த்திசை சுவடி நூலகம்,
   சென்னை.

4. மைராவணன் கதை,
   அரசினர் கீழ்த்திசை சுவடி நூலகம்,
   சென்னை.

4. இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து
   (மயில் ராவணன் கதை)
   உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.
   பதிப்பாசிரியர் - மு. ராமசாமி.

கதை சுருக்கம்

இந்திரஜித் முதலாக அனைவரும் இறந்தவுடன் இராவணன் புலம்புகிறான். இராவணன் நன்மை அடைந்திட மந்திரி ஒரு வழியைச் சொன்னான். உனது தம்பியான மைராவணனை வரவழையும் என்று மந்திரி கூறினான். இராவணனும் தன் தம்பியான மைராவணனை வரவழைத்தான். அவன் அடைந்த துன்பங்களை கூறி இராம லட்சுமணர்களை வென்று சுகந்தர வேண்டுமென்று இராவணன் தன் தம்பி மைராவணனிடம் வேண்டினான்.

அதற்கு மைராவணன் இரவுதனில் இராம லட்சுமணர்களை எடுத்துக் கொண்டு போய் பத்ர காளிக்கு பலி தருவேன் என்றான். இதனைக் கேட்ட ராவணன் மகிழந்தான். உறுதி மிகச் சொல்லி மைராவணன் லங்கைக்கு புறப்பட்டான். திருச்சடையாள் இந்த சேதிதனை வாயுதேவரிடம் சொல்லினாள். வாயுதேவர் விபிஷணரிடம் கூறினார் விபிஷணர் கேட்டு பயந்தார். சுக்கிரீவன் விபிஷணர் இருவரும் அனுமாரிடம் இதைத் தெரிவித்தனர்.

அனுமார் அரக்கன் வரட்டும் பார்ப்போம் என்று கூறி வாலால் கோட்டை ஒன்று உருவாக்கி அதில் இராம லட்சுமணர்களை பாதுகாத்தார். வானர வீரர்களும் கோட்டையைச் சுற்றி காவல் காத்தனர் கோட்டைக்கு வெளியே இருந்தும் உள்ளே போய் இராம லட்சுமணரை கண்டு வருவார். மைராவணனும் நாலு மந்திரிகளும் வரக்கண்டு அவன் மனைவி தடுக்கிறாள். எங்கு செல்கிறீர் என்று கேட்க அவன் காரணத்தைக் கூறுகிறான்.

அண்டம் அனைத்துக்கும் ஆதாரம் அவன். அவனை எதிர்த்தால் ஆயுள் ஒழியும் அழிவு நேரும் என்று கூறினாள். இதை கேட்காமல் அவனும் நாலு மந்திரிகளும் பச்சம சமுத்திரத்தை அடைந்து, இ

மந்திரிகளை அனுமானிடம் அனுப்பினான். அனுமானால் இரு மந்திரிகளும் துன்பமடைந்து மைராவணிடம் கூறுகின்றனர். மைராவணன் அவர்களை கேலி செய்து போய் பார்த்தான் உண்மையென்று நம்பினான். கோட்டைக்குள் செல்ல வழியில்லாமல் யோசித்தான். பின்னர் விபீஷணர் இல்லாத சமயம் பார்த்து கோட்டைக்குள் சென்று இராம லட்சுமணர்களைப் பெட்டியில் வைத்துக் கொண்டு அனுமானிடம் இராம லட்சுமணர் உள்ளே உறங்குகின்றனர் என்று கூறி என்னைப் போல் வருவான், நான் என்று சாதிப்பான், நம்ப வேண்டாம் என்று கூறி பாதாள லங்கை சேர்ந்தான். யாரும் பெட்டியைத் தொடாமல் வைத்துவிட்டு காவலிருக்கச் செய்து புறப்படுகையில் அசரீரி வாக்கு கூறிற்று. உனக்கு அழிவு நேரும். தூர்தண்டியின் மகன் நீலமேகன் லங்கை அரசாளுவான். உன்னையும் வென்று, இராம லட்சுமணரை எடுத்துக் கொண்டு போவான் அனுமான். இதைக் கேட்டதும் நீலமேகனையும் தூர்தண்டியையும் சிறை வைத்தான்.

விபீஷணர் வந்து அனுமானை பார்த்தார். அனுமானர் இவன் விபீஷணர் இல்லையென்று அவனை பாதகனே என்றும் பல வகையிலும் சோதித்தார். பின்னர் விபீஷணர் மைராவணன் செய்ததைக் கூறுகிறார். அப்பொழுது அனுமார் உண்மையென்று நம்புகிறார். கவலைப்பட்டு ஏமாற்றம் அடைந்தேன் என்று வருத்தப்படுகிறார். பின்னர் விபீஷணர் பாதாள லங்கைக்கு வழி சொல்கிறார். சமுத்திர நடுவிலே தாமரைகள் நிரையவுண்டு. அதில் நேராய் ஒன்று நிமிர்ந்திருக்கும் அதன் வழியாக சென்றால் கோட்டைகளும் பல அதிசயங்களையும் காணலாம்.

அனுமான் இராமனையும் சீதையையும் நினைத்து பறந்தார். கடலின் நடுவிலே சென்று சிவநிஷ்டைச் செய்து தாமரை வழியாக செல்லும் வழியில் வீரர்களை வென்றார். அடுத்து ஒருவன் தடுத்தான். போரிட்டார். அனுமானையே மீறிவிட்டான் அவன். யாரென்று அனுமான் கேட்க, அவன் அனுமான் அரணவத்தை அவர் தாண்டுகையில் வேர்வை விழ உதிரமாக

அதன் மூலம் பிறந்தவன் என் பெயர் மச்சிய வல்லபன். என் பாட்டன் வாயுதேவர். எனக்கு பலத்தை கொடுத்தார். இவ்வாறு இருந்து கடற்கரையோரந்தனில் விளையாடும் போது மைராவணன் என் மீது போர்புரிய வருபவரை தடுத்து காக்க அழைத்தார் நானும், காவல் காக்க வந்தேன் என்றான். நீ யாரென்று அவன் கேட்க அனுமான் என்றார். உன் உருவத்தைக் காட்டும் என்றான். சுவரூபங்கொண்டு காட்டினார். அவன் மகிழ்ந்தான். அப்பனும் பிள்ளையும் சண்டை போட்டதனை எண்ணி வருந்தினர். அனுமாரைப் பார்த்து எங்கு வந்தீர் என்றான். அனுமார் நடந்ததைக் கூறினார். அப்பனுக்கு உதவி செய்தால் அரக்கன் நோவான். அரனுக்கு உதவி செய்தால் ஐயன் நோவான் என்று இருக்கும் நிலையில் அவனை அடித்து மடிதனிலே வைத்து பாதுகாப்பான இடத்தில் விட்டுச் சென்றார். போகும் வழிகளில் தடுத்த அரக்கர்களை வென்று காட்டிலுள்ள ஆலமரத்தில் ஏறி அமர்ந்து இனியென்ன செய்வதென்று யோசித்தார். அப்பொழுது வனக்குளத்தின் படிக்கட்டுக்களில் அமர்ந்து கொண்டு ஒரு பெண் குறைகளைச் சொல்லி அழுதாள்.

அவள் அண்ணன் காளி கோவிலிலே இராம லட்சுமணர்களை பலிதர எண்ணி கோவில் ஆராதனைக்கு, குடத்தனில் நீர்கொண்டு வரச்சொன்னான். இத்தகு செயலுக்கு துணை செய்ய அவள் மனம் நாடவில்லை. அனுமானிருந்தால் இராம லட்சுமணர்களை காப்பார் என்று கூற அவள் எதிரில் அனுமான் வந்து நின்றார். அவள் இங்கு குரங்கேது, வந்த எது என்று கேட்கையில் அனுமான் என்றார். உருவத்தைக் காண்பிக்கவும் என்றவுடன் விசவரூபம் எடுத்தார். அவள் பார்த்து மகிமைதனை போதும் என்றாள். அரக்கனை அழித்து ஆதரிக்க வேண்டும் என்றாள். அனுமாரை பார்த்து ஆசையுடனே உரைக்கிறாள் தூர்தண்டி. என் அண்ணன் என்னை காலத்திற்கு மணமுடித்து எங்களை காத்து வந்தான். ஒரு மகன் பெற்று எடுத்தேன். மிக

பெருமையடைந்தேன். அண்ணன் மகளை என் மகனுக்கு தந்திடவே நினைத்தான். அதற்குள் அசரீரி என் மகன் லங்கையை அரசாளுவான் என்று கூற கேட்டு என் கணவனை ஏதும் தயவின்றி கொன்று, என் மகனையுங் கொல்ல வந்தான். நான் ஓடி அவன் காலில் விழுந்து அழுது கேட்டதால் எங்களை சிறையில் அடைத்தான்.

இப்பொழுது பத்துதலை இராவணனுக்காக என் அண்ணன் இராம லட்சுமணர்களை பத்ரகாளிக்கு பலிதர கொண்டு வந்துள்ளான். நீர் கொண்டு போனால் இராம லட்சுமணர்களை கொன்று விடுவான் அதற்கு முன் யங்கு போக வேண்டும் என்றாள். ஈபோல் உருவம் எடுத்து குடத்துக்குள் இருந்துவிடு என்று கூறி குடத்தை எடுத்துக் கொண்டு போகையில் இயந்திரத்தின் மூலம் கண்டறிந்து தூர்தண்டியை மிரட்டினர் அரக்கர்கள். அனுமார் விசுவரூபங்கொண்டு அவர்களை அடித்து அதமாக்கிவிட்டார். பின்னர் காளி கோவிலுள் நுழைந்தவுடன் காளி பார்த்தாள். பெட்டியில் இராமனும் லட்சுமணும் இருக்க கண்டு பூமி தேவியிடம் ஒப்படைத்து பாதுகாக்குமாறு கூறினாள்.

பிறகு சீதை தாயதை வாங்கிக் கொண்டாள். அனுமான் எதிர்த்து வந்த வீரர்களை வென்றார். அஞ்சி ஓடியவர்கள் சிலர். இதை மைராவணிடம் கூறினார்கள். அவன் கண்ணில் பொரி பறக்க வந்தான். சேனைகளைச் சேர்த்து போர் புரிந்தான். போரில் மைராவணனை மண்டை சிதற அடித்தார். சிதறிய தேகம் ஒன்றாக சேர்ந்து விடுகிறது. இவ்வாறு மீண்டும் அனுமான் அவனை அடிக்கிறார். அவன் மீண்டும் உயிர்பெறுகிறான். இதனைக் கண்டு ஆச்சரியம் கொள்ளுகிறார். மாண்டவர் உலகில் பிழைப்பதுண்டோ என்று சிந்திக்கிறார். இவனை வெல்லயவர் யோசிக்கையில் அவன் மறைந்தான். ஆலமரத்தடியில் யாகஞ் செய்தான் யாகத்தின் மூலம் பூதம் தோன்றியது. பூதத்தை அனுமான் மீது ஏவிவிட்டான். பூதம் அனுமானை துன்பத்தில் ஆழ்த்தியது. அனுமான் யாகந்தனைக் கண்டறிந்து அதை அழித்தார். அதனால் கோபம் கொண்டு

மைராவணன் மறைந்தான். தூர்தண்டிகை கூறுகிறாள் அவன் உ ஐந்து வண்டுகளில் உள்ளது. விந்தியாமலையிலுள்ள ஐந்து குகைகளி அவையுள்ளன. ஐந்து வண்டுகளை அழித்து அவன் மாரை பிளந்த அவன் உயிர் பிரியும் என்றாள்.

அனுமான் அவனை வாலால் இழுத்துப் போட்டு ஒரு காலைமா வைத்து மற்றொரு காலை விந்தியாமலைமீது வைத்து ஐந்து வண்டுக கசக்கி மாரை பிளந்தக்கால் அவன் ஆவி பிரியுமுன் அனுமா மகிமைதனை அறிந்தான். பத்நி வாக்கு பலித்தது. அசரீரி வா பலித்தது என்று கூறும் வேளையில் அவன் மனைவி வருகிற மனைவி அவனை பார்த்து அழுது நானும் உன்னுடன் வருவே என்கிறாள்.

அப்பொழுது அவன் உத்தமன் நீலமேகனுக்கு நம் பெண்ண கொடுத்துவிடு. அவனுக்கு பட்டந்தனை அனுமார் சூட்டுவார் எ கூறுகிறான். தங்கையையும் நீலமேகனையும் அருகில் அழைத் உங்களுக்கு துன்பம் தந்துவிட்டேன் என்று கூறி அனுமானி அடைக்கலம் அடைந்தான். பின் உயிர் விட்டான். வானில் விமா வர ஏறி வானுலகம் சென்றான். அவனுடைய தேகத்தை அடக்கம் செ நீலமேகனுக்கு ரூபாவதியை மணம் முடித்து பூமிபட்டந்தனை சூ மச்சிய வல்லபனை கண்டு அவனையும் அழைத்துக் கொண்டு லங் போனார். வானவர்கள் வாழ்த்தி வரவேற்றனர். ஒரு குறையுமி எழுந்தனர், இராம லட்சுமணர் நடந்ததையறிந்து மச்சியவல்லபனை கண்டு மகிழ்ந்தனர். அனுமானைப் பாராட்டினர். பத்துதலை இராவண இதைக் கேள்விபட்டு போர் செய்தான். இராமனால் மடிந்தா இலங்கையில் விபீஷணருக்கு பட்டாபிஷேகம் செய்து விமானம் அயோத்தி வந்தார்கள். இராமனும் சீதையும் வருவதைக் கன் வானவர்கள் முதல் இந்திரன் தசரதன் ஈசுவரனுமிக அனுகிரகித்தார் இராமனுக்கு அபிஷேக முடிசூட்டினர். இந்தக் காட்சியைக் கண்டு

அன்னைமார்கள் மகிழ்ச்சி கொண்டனர். இவர் ஆட்சியில் இராப்பகலும் நன்மைகள் பெருதம்மா. கடவுளின் அரசாட்சி முறையே முறை என்று போற்றினார்கள்.

ஸ்ரீ கிருஷ்ண பக்தனை சீருடனே காக்கும் ஸ்ரீ ராமச்சந்திரன் வாழ்ந்திடவே. இந்த கதைதனை உலகந்தனில் சொல்லி பெருமைபெற ஜகமெங்கும் வாழி.

– முற்றும் –

ஓம்
ஸ்ரீராம ஜெயம்

மை ராவணன் வதை*
[கும்மி மெட்டு]
கடவுள் வாழ்த்து

1. தந்தையை முந்தியே வந்துதவி செய்ய
சொந்தங் கொள்ளும்சிவ மைந்த னான
தொந்தி மிகுந்துள்ள எந்தன் வினாயகன்
அந்தி பகலுமென் சிந்தையிலே

2. அந்தரங்க மாக வந்து நிற்பானவன்
சிந்தை மகிழ பந்த மொழிப்பான்
கந்த னுதிக்குமுன் வந்த வனாமிவன்
எந்தன் வாக்கில் வரும்இந்தக் கொம்மி

3. அந்தமுடன் வெகு விந்தையாகச் சொல்ல
சுந்தரனாய் வந்து முந்தி நிற்க
தந்தையைப் போலெண்ணி வந்தனஞ் செய்கிறேன்
சந்தஞ் சிந்தாமலே எந்தனாலே.

4. செப்பும் படியாயும் ஒப்பும் படியாயும்
அப்பன் கணபதி யருள் புரிவான்
இப்புவியிலிதை செப்புவோருக் கெல்லாம்
தப்பாது பாக்யங்கள் எப்பவுமே.

5. முக்கண்ணன் மகனாகி மூலகா ரணமாகி
மோகாதி யந்தக் கடலுக்கொரு
தக்க வோடமாகி தரணியோ ரெல்லோரை
தயவுடன் காக்கும் வினாயகனே.

*மயில் ராவணன் வதை

6. சொல்லு மிந்த கொம்மி சுகமா யமைத்திட
சுவாமியருள் செய்ய வேண்டு மையா
நல்ல கொம்மி யென்று நாடெங்கு மகிழவே
நாக்கு நயந்தர வேண்டுமையா.

மைராவணன் வதை*
(கொம்மி மெட்டு)

1. இந்திரஜித் தாதியாய் எல்லோரும் போனபின்
என்னசெய்வோ மினி யென்றரக்கன்
சிந்தைமிக நொந்து சிரமமடைந் தானப்போ
செப்பு கிறானொரு மந்திரி வந்து.

2. போனதெல்லா மெண்ணி புலம்புவ தேனையா
புத்தி தனைவசங் கொள்ளு மையா
நானுரைப்பேன் கேளீர் நன்மை யடைந்திட
நல்வழி தானதைச் சொல்லு வேனே.

3. பாதாள லங்கையைப் பரிபாலனஞ் செய்யும்
பராக்கிர முள்ள மைரா வணனாம்
மேதாவி தம்பி யுமக்கிருக்க வீணாய்
மெலிந்து மனம்நோக லாமோ பாரீர் ?

4. சத்துருக்கனை வெல்லும் சாமர்த்திய முந்தானே
ஜகத்தி லுண்டோ ? அவர்போ லெவர்க்கும்
எத்தனையோ சக்த்தி இருக்கு தவரிடம்
இப்பொழு தேயவர் வருவா ராயின்

5. இஷ்டப் படியுமக் கெல்லா வுதவியும்
இணங்கிச் செய்வாரவர் துணையாய் நின்று
கஷ்டமெல்லாந் தீரும் காரியங்கள் கூடும்
கருதிய வரையே வரவ ழையும்.

*மயில் ராவணன் வதை

6. இந்தவிதஞ் சொல்ல இலங்கேசன் கேட்டு
இது நல்ல யோசனை யென்றெண்ணியே
அந்த மைராவணன் வந்திட வெண்ணினான்
அறிந்து மைராவணன் அந்தவுடன்.

7. மந்திரி களொடு மனக்கருத்தைச் சொல்லி
மனமுவந்து லங்கை வந்து சேர்ந்து
தந்தை போல வெண்ணி தமயன் பாதந்தனில்
தண்டனிட்டு கைகூப்பிக் கொண்டு.

8. என்னை நினைத்த எதுதனைச் சொல்வீர்
ஏனிந்த லங்கை விகார மாகி
முன்னிருந்த செழிப்பின்றி யிருக்குமோர்
முகாந்தர முந்தானே சொல்லு மண்ணா.

9. உமது முகந்தனி லுச்சாக மில்லாமல்
உருகி மணம் நோகும் விதமுமென்ன ?
சமுசிய மில்லாமல் ஷணந்தனிலே யந்த
சங்கட மெல்லா மொழிப்பே னென்றான்.

10. அரக்கர் மன்னன் கேட்டு அகங்குளிர்ந் தேயவன்
அனுகூல மிவனா லடைவோ மென்று
வரலாறுக ளெல்லாம் வாய்தவமாய்ச் சொல்லி
வந்த கஷ்டங் களையொழிப் பதற்கு.

11. உன்னையன்றி யாரும் உண்டோ? வெனக்குத்தான்
உண்மை யாகப் பாராய் கண்மணியே.
என்னையாதரிப்பாய் இந்த வேளைதனில்
எதிரிகள் ராம லட்சு மணரை.

12. வென்று சுகந்தர வேண்டுமென்று கோர
விதனப்பட வேண்டாம்- சொல்வேன் கேளீர்
என்றரக்கன் முன்னே இவ்வாறு ரைக்கின்றான்
ஏனிந்தச் சேதியை முன்ன தாக.

13. அறியும்படி செய்ய அலட்சிய மேன்செய்தீர்
அரக்கர நேகனா யேனிழந்தீர்
குறித்தறி யாமலே கொள்ளை தரலாமோ ?
குலத்திலுள்ள வெகு வீரர்களை.

14. போனதெல்லா மெண்ணிப் பொழுது போக்குவதில்
பொருந்துமோ ? நஷ்ட மடைந்த தெல்லாம்
ஆனமட்டுங் காப்பேன் அஞ்சவேண்டா மென்று
அண்ணனுக்கு மிக தைரியஞ் சொன்னான்.

15. இரவுதனில் வந்து இராம லட்சுமணரை
எடுத்துக் கொண்டு போயென் னுடைய
அருமையான பத்ர காளிக்கு பலியாக
அவரைக் கொடுத்து விடுவே னென்றான்.

16. அரக்கர்மன் னன்கேட்டு ஆனந்தங் கொண்டு
ஆலிங்கனஞ் செய்து முத்த மிட்டு
அருமைத் தம்பியென்று அன்புகொண் டாடினான்
அரக்கர் மன்ன னப்பால் மைராவணன்.

17. உறுதி மிகச் சொல்லி உடனே பாதாளத்தில்
உள்ள தனது லங்கை சேர்ந்து
குறித்து மந்தரிட்கு கூறி வீர்த்தாந் தத்தை
கோரிச் செய்தான் சிலயத்த னங்கள்.

18. திருச்சடையா ளிந்த சேதிகளை யெல்லாம்
திருத்த மாக வாயு தேவனிடம்
விரித்து ரைத்தபடி விபீஷணரிடம் வந்து
விவரப் படவாயு தேவர் சொன்னார்.

19. விபீஷணர் கேட்டு மிகப்பயந் தாரவர்
வெகுதோ தறிந்தமை ராவணனால்
விபரீதங் கள்மிக விளையுமென் றெண்ணியே
விசனங் கொண்டு முகம்வாடி நின்றார்.

20. தன்னிலா லோசித்துத் தத்தளிக் குந்த
தயவு மிகுந்த விபீஷணரை
மன்னன் சுக்கிரீவன் வந்து கண்டுமன
வருத்த மென்னசொல்லு மென்று கேட்டான்.

21. இன்றிர வுதனில் இராம லட்சுமணரை
எடுத்துக் கொண்டுபோய் வதைபுரிந்து
வென்றிட வேயெண்ணி வெகுசூத றிந்தவன்
வீரனான மைரா வணனாம்.

22. பாதாள லங்கேசன் ப்ரதிக்னை செய்தானென்று
பட்சமுள்ள யெந்தன் புத்ரி யான
மாதுதிருச் சடைமன முவந்தெனக் கிப்போ
மருமம் வாயுபக வானிடத்தில்.

23. சொல்லி யனுப்பினாள் சூதுள்ள வரக்கனை
சுக்கிரீவரேவெல்லப் போகா தையா
அல்லும் பகலு மநேகபாடு பட்டோம்
அனைத்தையும் வியர்த்த மாகும்படி.

24. செய்திடு வானவன் ஜெயிக்க அவனைநாம்
செய்வ தென்னவென்று கைபிசைந்தார்
ஐயம்வேண் டாம் நாம் அனுமாரிருக் கின்றார்
ஆபத்து களெல்லா மொழித்திடவே.

25. கவலைப்பட வேண்டாம் கண்தாரை விடவேண்டாம்
கஷ்டம் வராமலே காப்பாரவர்
அவகுட னேநாம் ஆலோசிப்போம் வாரும்
அனுவளவும் பயம் வேண்டா மென்றார்.

26. அதன்பிறகு ஜாம்பு வந்தரோடு கூடி
அனுமா ரிடமவர் வந்து சேர்ந்து
துதித்துச் சொல்லுவார்கள் தொல்லுல கிலும்மை
துணிந்துவந் தெதிர்போர் களாருமுண்டோ ?.

27. ஐயனை யுமவர் தம்பியையுந் தானே
அரக்கன்மை ராவணன் அந்தியிலே
தைரியமாய் வந்து தஸ்கரித்துப் போக
தந்தரிஞ் செய்திட வந்திடவே.

28. ஆலோசனை செய்த அந்தச் சேதிதனை
அனுமானே யுன்னிட தந்தை வந்து
காலோசி தங்கண்டு காரியங்கள் செய்ய
காதிலு ரைத்தர் விபீஷணர்க்கு.

29. ஆகையி னாலே அந்தி யெல்லாம்நீர்
ஆதி யந்த மறியாதிருக்க
தேகம் வளர்த்தி திருத்தமாக வாலால்
தேரிய கோட்டை யொன்றுண் டாக்கியே.

30. ஸ்ரீராமச் சந்தரனும் சீருள்ள தம்பியும்
சேனைகளும் ஷேமமா யிருக்க
ஆராலு மில்லை யாதரிப் பதற்கு
அனுமானுன் னாலேயே ஆக வேண்டும்.

31. எந்த வேளையில் எதுவந் தாலுமே
ஈஷத்து மஞ்சாமல் நேசத் தோடு
வந்ததெல்லாந் தாங்க வல்லமை யுனக்கன்றி
வையத்தி லார்க்கு மில்லை யென்றார்.

32. அனுமானதைக் கேட்டு அப்படியா சேதி
அரக்கன் மைராவணன் வரட்டும் பார்ப்போம்
எனது சக்தியினா லெடுப்பேன் கோட்டையொன்று
எவரு மதற்குள் வராத படி..

33. அப்படியே செய்வேன் ஆஞ்சவேண்டாம் யாரும்
அரக்கர்சூ தென்னிடம் நடக்கா தையா
எப்படிதா னென்னை இராட்சதன் வெல்வானோ
இதையுஞ்சற்று நீங்கள் பாரு மென்றான்.

34. அந்தியி லையனும் தம்பியும் சேனையும்
அசந்து நித்திரை செய்யும் வேளையிலே
வந்து வாலைக்கொண்டு சந்துக்கிட மின்றி
வாயுசுதன் போட்டான் கோட்டை யொன்று.

35. சூரிய மண்டலந் தன்னைக் கடந்து
சுரங்கங் கொண்டுபா தாளம் பாய்ந்து
ஆருமதற்குள் எணுதா திருக்கவே
அற்புதமாய்க் கோட்டை அமைத்தனனே.

36. நாலு புறங்களில் கால தேசங்கண்டு
நன்றாய்ப் பாதுகாக்க அன்று ராத்திரி
வாலுக்கோட் டைக்கப்பால் வானர வீரர்கள்
வந்து காவலு மிருந்தனரே.

37. கோட்டைவெளி சுத்தி கோட்டைக்குள் ளும்போய்
கோதண்ட பாணியைக் கண்ணில் கண்டு
நாட்டத் தோடுமிக நன்முயற்சி செய்வார்
நாலு மறிந்த விபீஷணர்தான்.

38. அனுமான் வாயிலேறி அவன்காது வழிசென்று
அந்தக் கோட்டைக் குள்ளே போவதன்றி
நினைக்க வுண்டோ வழி நிஜமாகவே யில்லை.
நேத்திவெகு நேத்தி கோட்டை யம்மா.

39. அண்ட பித்திகளை அதிக்கிரமித் துப்போகும்
அந்தக் கோட்டையின் அத்துக் குள்ளே
தண்டுகளும் ராம லட்சு மணர்களும்
தங்கியுறங் கிக் சுகித் திருந்தார்.

40. மந்திரி நால்வரோடும் மற்றுஞ் சிலரோடும்
மைரா வணன்வர யத்தனித்தான்
எந்தன் பிராணேசரே இன்னேவந் தன்னிலே
எங்குபோ ரீரென்று அவன் பத்நியாம்.

41. வர்ன்ன மாலிகை வந்து தடுத்து
வாஸ்தவத்தைச் சொல்லுமென்று கேட்டாள்.
நிர்ண்ணயித்த சேதி நேராயவ ளோடு
நீசன் மைராவணன் சொல்லக் கேட்டு.

42. நெஞ்சு துடிக்க அஞ்சியந்த பத்நி
நேசங்கொண்டு சொல்வாள் ஆசை தீர
மஞ்ச ளழகும் மற்று முள்ளசுகம்
மனமகிழத் தரும்மண வாளரே.

43. கேடுவரு முன்னே கெட்டு வகுமதி
கேவலமாய்கதி தானு மாகும்
நாடி யறிந்தால் நன்மை யுண்டாகும்
நாளுங் குறைவின்றி நாம் வாழுவோம்.

44. உம்மைத் தடுக்க ஒருவா ரலுமில்லை
உமதிஷ்டப் படியினும் நடப்பவளே
நம்முடைய சேஷமம் நாமறிந்து செய்ய
நானுரைப் பேன்சில நன்மைகளை.

45. மனிதன் ராமனென்று மனதிலெண்ணிக் கொண்டு
மமதை கொண்டு வெல்ல மணந்துணிந்தீர்
அனைத்துக்கு மாதார மாக வுள்ளவொரு
ஆதிமூறலப் பொருள் அவனே யாவன்.

46\. அஷ்ட பாக்யங்களை யளிக்கு மகாலட்சுமி
அவன்பத்நி சீதை யென்றறிந்த கொள்வீர்
இஷ்டப் படிகதி எண்ணித் தருகின்ற
எம்பெரு மானையும் எதிர்க்க வுண்டோ ?

47\. விளக்குப் பூச்சிபோல வெந்து போவரரன்றி
வெல்லவுண் டரேரகு வீரனைத்தான்
அளவில்லா பலமுள்ள அவனைப் பகைப்பது
ஆயுளொழியும் அழியச் செய்யும்.

48\. சொல்வதெல் லாங்கேளும் சூட்சுமித்துப் பாரும்
சூரதவத்தை யெண்ணி துணிய வேண்டாம்.
வல்லபரைக் கண்டு வழியோடொ துங்குதல்
வாழ்வுக் கிதமாகும் தாழ்வின்றியே.

49\. தசகண்ட ஈறிவின்றி சீதைதனைப் போய்
தஸ்கரித்த சேதி தானறிவேன்
நிஜபய மிருந்தக்கால் நேராய்போய் கொள்ளாமல்
நினைத்துத் திருடின நியாயந்தனை.

50\. சற்றறிந்து பார்க்கில் சர்வேசனே ராமன்
சமுசய மேயில்லை என்றறிவீர்
கற்ற வித்தையெல்லாம் கர்த்தனிடங் காட்டி
காரிய சாதக மாமோ பாரீர்.

51. புத்திரமித் திராதிகள் பகுபேர்களும் போய்
புத்திதச கண்டர்க் கேதுமிலை
உத்தமர் தம்பி யுரைத்தார் வெகுநீதி
உதாசீனஞ் செய்தவரைத் தள்ளினார்.

52. காலதே சாதிகள் கண்டு விபீஷணர்
கர்த்தன் ராமபாத கமலஞ் சேர்ந்தார்
நாலுமந் திரியொடு நன்மை யடைந்திட
நாளுஞ் சிரஞ்சீவி யாய் வாழவே.

53. அவரைப்போல நீரும் அடைக்கலமாய் ராமன்
அடிபணிந் தாலும்மை யாதரிப்பான்
எவருமும்மை வந்து எதிர்க்கப்போ மோஅப்பால்
எக்காலுங் குறைவில்லா இன்பமுண்டாம்.

54. கஷ்டம் வருமென் றிஷ்டங் கொண்டு தானே
கணவரே மிகவும்மை வேண்டுகிறேன்.
நஷ்டம டைந்துநான் நானா விதத்திலும்
நாட்டில லைந்திடச் செய்ய வேண்டாம்.

55. அனுமா னென்றொரு அரிய பக்த்தனுண்டு
ஆண்டவன் ஸ்ரீராமன் அண்டை யிலே
கனமுடைய வீரன் காலுனுக்குக் காலன்
கதற வடிப்பான் எதிரிகளை.

56. அலுத்தடங்கு வோர்கள் வலுத்தவரைப் போய்
அமைப்ப துண்டோ ? அமர்புரி வதற்கு
குலத்துக் கானிவரும் கொடுமைமிக நேரும்
கோதண் டபாணி பகை வேண்டாம்.

57. மாங்கல்ய பிட்சை மனமுவந்து தாரும்
மனக்கொ திப்பை மாற்றி யாதரியும்
தாங்கமாட்டீர் வீணாய் தாஷ்டிகம் வேண்டாமென்
தாகந் தீர்க்கும் பிராண நாதரெயென்.

58. றழுது முறையிட்டு அடிபணிநது கேட்டாள்
அபய வாக்குநான் தந்து விட்டேன்
வழுவி நடக்க வகையில்லை யென்றந்த
வஞ்சகன் மைரா வணனு ரைத்தான்.

59. பத்நியந் தப்புரம் பரிதபித்துச் சென்றாள்
பாதக னாமந்த மைராவணன்
அத்யந்த மகங்கொண்டு அங்கிருந்து தானே
ஆலோசனை யெல்லாம் செய்து கொண்டு.

60. பரிவாரங் களோடு பாதாளத் தைவிட்டு
பச்சிம சமுத்திர கரை யடைந்து
இருந்துகொண் டானங்கே இருவர் மந்திரிகளை
ஏவிவிட் டானவர் அனுமானிடம்.

61. வந்துபார்க்க கோட்டை வழியில் லாமலே
வாலைக் கொண்டுண் டாக்கி வாயுசுதன்
தந்திர மாகவும் தாஷ்டிக மாகவும்
தடுத்திருக்கக் கண்டு அடுத்து வந்து.

62. சந்து கிடைக்க சருவப்பிர் யத்தனம்
சாமர்த்திய மாகவே செய்து பார்த்து
உந்தித் தலைகளை உள்ளே செலுத்தினார்.
உடலை வெளிப்புறம் நிறுத்திக் கொண்டு

63. வாலை நெருக்கினான் வாயுசு தனப்போ
வஞ்சகர் கஞ்சி யாகும் படியாய்
காலைத் தொழுது கடாட்சிக்கக் கோரினார்.
காதக காமந்த மந்திரிகள்.

64. இரக்கங் கொண்டு சற்று இளக்கஞ் செய்ய வாலை
இருவரும் தலைகளை யெடுத்துக் கொண்டு
பரிதபித்துக் கொண்டு பறந்தோடியே வந்து
பாதக னாமந்த மைரவாணன்.

65. பாதந்தனில் வீழ்ந்து பட்டபாடு போதும்
பிராணந் தப்பி வந்தோம் திராணியின்றி
வேதனையைச் சொல்லில் விரியுமென் றழுதார்கள்
வெகுவாய ரக்கன் அவரைப் பார்த்து.

66. பரியாசங் செய்து பலகுறைகள் சொல்லி
பாதகன் றானே போவே னென்று
கருதிப் புறப்பட்டு கடுகிவந் தானம்மா
கனமான அனுமா னிருக்க மிடம்.

67. ஆகாய வெளியையும் அடைத்துக் கொண்டு தானே
அனுமா னிருக்கும் ஆகாரங் கண்டு
மாகாய ரூபனாம் மாருதியை வெல்ல
மாளாதென் றெண்ணினான் மைராவணன்

68. என்னசெய் வோமினி யென்று மாலோசித்தான்
ஏதும் வழியின்றி தான லைந்தான்
சொன்ன மந்திரிகள் சொல்லையும் நம்பினான்
சூட்சுமமாய் தன்னில் வீட்சணித்தான்

69. விபீ ஷணரைப்போல் வேஷ மெடுத்து
வேறெ வரும் அறிய திருந்து
விபீஷண ரில்லாத வேளை பார்த்து வந்து
விஷமஞ் செய்ய வவன் தொடங்கினனே

70. அசந்துபோக வேண்டாம் அரக்கன் சூது செய்வான்
அனுமானே ஜாக்கிரதை யென்று ரைத்து
வசப்படுத்திக் கொண்டு வஞ்சகனவர் வாயில்
வந்து காதுவழி யுள்ளே சென்று.

71. இராம லட்சுமணரை இராட்சதன் பெட்டியில்
இரகசிய மாகவே வைத்துக் கொண்டு
ஏமாற்றியே வந்து எண்ணி மாருதிமுன்
இவ்வித மாகவே சொல்லுகிறான்.

72. உள்ளே சென்று பார்த்தேன் ஒரு குறையுமின்றி
உறங்கு கின்றார் ராம லட்சுமணர்
கள்ள னரக்கன் காயமெனைப் போல
கபடமாகக் கொண்டு வந்திடுவான்.

73. நம்பிக்கையும் செய்வான் நானென்றுஞ் சாதிப்பான்
நம்பவேண் டாமதைச் சொன்னேன் சொன்னேன்
அம்பு வியலும்மையார் மயக்கப் போகும்
அனுமானே ஜாக்கிரதை யென்று சொல்லி.

74. சுவாமிக்குந் தம்பிக்குஞ் சொக்குப் பொடி போட்டு
சுவாதீனத்தில் கொண்ட மைராவணன்
சுவானம் போல் தானே சடுதியாக வோடி
தனது லங்கை வந்து சேர்ந்ததன்மேல்.

75. பெட்டிதனை யாரும் தொட்டெடாமல் வைத்து
பெருமையாகத் தன்னைப் பேசிக் கொண்டு
சுட்டி யாஞ்ஞை செய்தான் சூரர்சிலருக்(கு)
சொல்லு மப்போ தசீர் வாக்கு.

76. உண்டாயிற் றிவ்வாறு உணர்வில்லாத மூடர்
உலகில் ராமனுந்தா னாரென்றாலோ ?
அண்ட சராசரம் அனைத்துக்கு மாதார
ஆதிமூலப் பொரு ளேயவனாம்.

77. அவனை யெடுத்தோர் பெட்டியிலே வைத்து
அதமாக்குவே னென்று அகமகிழும்
விவேக மற்றவனே வேருட னொழிவாயே
வேண்டாமடா இந்தக் காரியமே.

78. ஆகாயங் கைக்கொண்டு ஆளுவோரு முண்டோ ?
அகிலாண்ட நாயகன் அடங்கவுண்டோ ?
சோகாதி வந்திடும் சொல்லும் வாக்கைக் கேளாய்
சூரனென்று மிகத் துள்ளாதே.

79. அனுமானெனும் வீரன் அக்கிர கமாகவே
அதிசீக்கிர மாயிந்த அந்தி தனில்
தனது சக்திகொண்டு தந்திரமாய் வந்து
தண்டிப் பானுன்னை வதை புரிவான்.

80. உனது சோதரியாம் துர்தண்டியின் மகன்
உத்தமனாம் நீல மேகனுக்கு
உனதரசு பட்டம் உண்மையாகக் கட்டி
உச்சாகமாய் ராம லட்சுமணரை.

81. எடுத்துக் கொண்டு போவான் இதுநிச்சயம் பாராய்
ஏனுனக்கு வீண் சபலமடா
தடுத்துச் சொல்லும் வாக்கை தள்ளப் போகாதடா
தானவ னேயென் றேயுரைத்த.

82. அந்தவாக்கைக் கேட்டு அலட்சியமா யெண்ணி
அகங்கொண்டு தானே யரக்கனப்போ
சிந்தைமிக நொந்து சிறையிலி ருக்கின்ற
சீலமுள்ள தூர் தண்டியையும்

83. நீலமே கனையும் நிர்ப்பந்தப் படுத்தியே
நினைத்து விலங்கு பலமாயிட்டு
வேலைக்கார ரையும் வெகுகிங் கரரையும்
வெடியு மட்டுமிக ஜாக்கிர தையாய்

84. இருக்கும்படி சொல்லி இல்லாளுடன் கூடி
இன்ப மனுபவிப் போமென்று
கருதியவன் போனான் காவற்கார ரெல்லாம்
காத்திருந்தார் மிக ஜாக்கிர தையாய்

85. எச்சரிக்கை சொல்லி எட்டுதிக்கும் போய்
இருக்கும் ஸ்திதி யெல்லாம் கண்டறிந்து
அச்சுதனி ருக்கின்ற அந்தப்புரம் போக
அனுமானிடம் விபீஷணர் வந்தார்.

86. தெரியுமடா வுந்தன் சேதிக ளெல்லாம்
திருட்டுப்பய லென்று கண்டு கொண்டேன்.
உருவெடுத்து வந்தாய் உத்தமராம் நம்ம
உண்மை யுள்ள விபீஷணர் போல

87. இங்கு நின்றாலினி இம்மை செய்வேன்மிக
என்னிடத்தில் மாயம் செய்ய வேண்டாம்.
பங்கம்வரும் பாராய் பறந்தோடியே போவாய்
பாதகனே மை ராவணனே.

88. நிஜரூபத்தைக் கொண்டு நீயொதுங் காமலே
நீர்ப்பதென்ன ? சொல்வாய் பாதகனே
வசப்படு வானோ ? வாயுசுதனுந்தான்
வழிகண்டு போவென்றான் மாருதி தான்.

89. வஞ்சகனா மந்த மைராவணன் றானே
மயக்கி மோசஞ் செய்து மாருதியை
அஞ்சா மலையனை அனுஜனோடு கூட
அபகரித்துக் கொண்டு போயி ருப்பான்.

90. நம்மைப் போலவந்து நயந்துப தேசித்து
நம்மையும் நம்பாமல் செய்து விட்டான்
நம்மனு மாரதை நாடி யறியாமல்
செம்மையாக மோசம் போனா ரென்று.

91. நிச்சயித்துச் சொல்வார் நீசன் சூதறியாமல்
நீர் மோசம் போனீரே மாருதியே
அச்சு தனையும் அனுஜனையுந் தானே
அரக்கனாக் கிரமித்துக் கொண்டு போனான்.

92. வெகு சூதறிந்தமை ராவணன் வந்திங்கே
வேளை பார்த்தும்மை யேமாற்றி விட்டான்
வகை மோசம் போனீரே வாஸ்தவ மறியாமல்
வஞ்சகன் சூதுக் கிணங்கி விட்டீர்.

93. கபடவேஷங் கொண்ட காதகனை நம்பி
காரிய மெல்லாங் கொடுத்து விட்டீர்
விபரீதம் விளைந்தது விவேக மொழிந்தது
வெறும்பா டாயிற்று செய்த தெல்லாம்.

94. என்று குறைசொன்னார் ஏமாற்ற வந்தீரோ ?
எல்லாத் தந்திரமும் நானறிவேன்
என்று முன்னை நம்பேன் என்முன்னே நிற்காதே
இப்பொழுதே வதை புரிவே னென்று.

95. அனுமார் சொல்லக்கேட்டு ஆச்சரியங் கொண்டு
அகமிகவே நொந்து அழுது கொண்டு
மனக்கவ லையினால் மயங்கி மூர்ச்சையாகி
மறுபடி யுமவர் எழுந்து நின்று.

96. நேத்தியிது வெகுநேத் தியென்றே யெண்ணி
நிஜமறியச் செய்வ தெவ்வா றென்று
ஆத்திரத் தோடு அனுமான்றனைப் பார்த்து
ஆயா சமாய் விபீஷணர் சொல்வார்.

97. உமதிஷ்டப்படி யென்னை உபத்ர வித்துவிடும்
உயிரிருந் தெனக்கினி யாவ தில்லை
சமுசியமே வேண்டாம் சண்டாளனல்ல நான்
சாமி பக்தன் விபீஷண னென்றான்.

98. அதுவுமல் லாமல் அநேக விதமாக
அவரைச் சோதித்தான் அனுமானம்மா
சதிகாரனி வரல்ல சத்யவந் தரென்று
சரியாய்த் தெரிந்த தன்மேல னுமான்.

99. மனக்கவலை கொண்டு மட்டில்லா குறைகொண்டு
மாபாவி யாமந்த மைராவணன்
தனது வசங்கொள்ள தந்திரங்கள் சொல்லி
தலையில் கல்லைப் போட்டா னென் றெண்ணியே.

100. பரிதபித் தான்மிக படபடப்புக் கொண்டு
பாபியை யெண்ணிப் பற்கள் கடித்தான்
தரும புத்தியுள்ள தனது நேசரான
தானவர் விபீ ஷணரைப் பார்த்து.

101. போசம்போ னேனையா லேசம றிவின்றி
மூடனெனைப் போல யாரு முண்டோ ?
பேச வாயுமுண்டோ ? பெருமை எனக்குண்டோ ?
பேதைக்கும் பேதை யாகி விட்டேன்.

102. என்னைப் போலுந் தானே ஏழைப்புத்தி யுள்ளோர்.
எங்குமில் லையென் ஜான்மம் வீணே
அன்னை சீதையினி ஆவி விடுவாளே
அன்யாய மாகவே முடிந்து தையா.

103. எல்லை யில்லாமலே எடுத்தேன் சுவரூபத்தை
எல்லோ ரையும் பாதுகாத் திடவே
வல்லமையைக் காட்டிவால் கோட்டையும் போட்டேன்
வஞ்சகன் சூதறி யவிலையே.

104. பண்டித னென்றும் பராக்கிரம முண்டென்றும்
பாரில் புகழுவா ரென்னைமிக
துண்டன்மை ராவணன் தோதை யறியாமல்
தூங்கி விட்டேன் மதி கெட்டு வீணாய்.

105. எத்தனையோ தந்தரம் எனக்குத் தெரியும்
எல்லாம் வியர்த்தமாக போயிற் றையா
உத்தம ராமும்ம உருவங் கொண்டு வந்தான்
உண்மை யென்று நம்பி யுள்ளே விட்டேன்.

106. சதிசெய் தானந்த சண்டாளப் பாவி
சமத்தை யிழந்து சுவா தீனமானேன்
விதிவச மிவ்வாறு விளையுமென்று சற்றும்
விவர மறியாமல் போனேனேன் னன்று.

107. அனுமா ரமுகையில் அவரைக் கட்டிக் கொண்டு
அனுதாபத் தோடு விபீ ஷணரும்
மனம் வருந்திமிக மனக்குறைகள் சொல்லி
மட்டில் லாமல்த் தானே கதறினரே.

108. அதன் பிறகு அந்த அனுமார் விபீஷணர்
ஐயன்நித் திரைசெய்த விடத்தில் வந்து
சதிசெய்த சங்கதி கரியா யறிந்தவர்
சங்கடப் பட்டுச் சலிப்ப டைந்தார்.

109. விபீஷணனார் மிக விதனப் படக்கண்டு
வேண்டா மையா சோகம் விட்டுவிடும்.
உபகாரமே செய்ய உதித்தவனா னையா
ஒன்றுக்கு மஞ்சாமல் உளவு சொல்வீர்.

110. பாதாள லங்கைக்குப் பாதை சொல்லுமையா
பறந்துபோ வேனந்தப் பாதகனை
ஏதாகிலுஞ் செய்து இமுத்தவனை வென்று
இராம லட்சுமண ரிருவரையும்.

111. கொண்டு வருவேன் கொஞ்சமுந் தப்பேன்
குறிப்பாய் வழியெல்லாம் சொல்லு மென்றான்
உண்டதற்கு வழியுரைப்பேன் கேளு மென்று
உண்மையாக விபீஷணர் சொல்வார்.

112. அஞ்சவேண்டா மென்று அனுமாரே நீர்சொன்ன
அமிந்த வாக்கைக் கேட்டு அகமகிழ்ந்தேன்
சஞ்சலத்தை விட்டுச் சரியாய் வழிசொல்வேன்
சமுத்திர மத்தியில் தாமரைகள்.

113. எத்தனையோ வுண்டு அத்தனை மத்தியில்
இருக்கு தையாவொரு மேலான
சுத்தமுள்ள நல்ல சொகுசான தாமரை
சோபித மாக விளங்கு தையா.

114. தாமரை யாமந்த தண்டு தனிலொரு
தடமுண்டு பாதளம் போவதற்கு
நேமமுடன் சிவ நிஷ்டைசெய் வோருக்கு
நேராய் விளங்கு மந்த மார்க்கம்.

115. இருக்கு மந்தவொரு இரகசிய வழிதனில்
எடுத்தணு ரூபங் கொண்டு போனால்
அருமையான வெகு அதிசயங்கள் காணும்
அரக்கர் சேனைக ளநேகங் காணும்.

116. கோட்டை கொத்தளங்கள் கோட்டியாகக் காணும்
கோண வழிகள் அநேகங் காணும்
ஆட்டப் பாட்டங்களும் அதிசயமாயக் காணும்
அரக்கர் செய்யும்பல அழிம்புங் காணும்.

117. எத்தனையோ இடர் இருக்குதையா அந்த
இராட்சதன் நகர்போகும் மார்க்கந்தனில்
அத்தனையும் உம்மால் அதிக்கிர மிக்கலாகும்
அதன்பிறகு அந்த மைராவணன்.

118. வசிக்கும் லங்கைதனை வகையோ டடையுவீர்
வஞ்சகனையும் வதை புரிவீர்
நிஜமாகவே ராமலட்சு மணர்களை
நேராயிங்கு கொண்டு வந்திடுவீர்.

119. இதுவுமின் றியிலே இன்னு முண்டுசில
எண்ணிய றிந்திட மர்ம மென்று
அதையுஞ் சொன்னார்மிக அன்புடனே கூடி
அனுமான தற்கப்பால் எழுந்து நின்று.

120. ஸ்ரீராமச் சந்திரனைச் சித்தந்தனி லெண்ணி
சீதை யருளை மிகவுங் கோரி
பாராயணம் ராம தியானமொன்றே கொண்டு
பறந்து விட்டார் மிகவே கமாக.

121. சமுத்திர மத்தியிலே சரியாய் வந்துசோந்து
சாரமுள் ளவொரு தாமரைதான்
நிமிர்ந்திருக்கக் கண்டு நிச்சயத்தைக் கொண்டு
நேராயதில் வழி தேடி பார்த்தார்.

122. தமரத் தண்டிலே தடங்கா ணாமலே
தத்தளித்து மிகத்தயங்கி நின்று
நேமங் கொண்டு சிவநிஷ்டை தனைச்செய்து
நேரான மார்க்கத்தைக் கண்டதிலே

123. புகுந்து போனாரந்த புண்ணிய வானான
போதமுள்ள நம்ம மாருதிதான்
அகந்துணிந் தேயவர் அதிகதூரஞ் சென்றார்
அரக்கர்படை வெகுமுருக் குடனே.

124. வந்து தடுத்தார்கள் வாயுசுதன் கண்டு
வஞ்சகர் கூட்டத்தில் போய் விழுந்து
அந்தப் பாவிகளை அதமாகவே யாக்கி
அதைக் கடந்து போகும் வேளையிலே.

125. அதிவீர சூரனாய் அதட்டி மிரட்டியே
அனுமானை வந்து தடுத்துக் கொண்டு
எதிர்த்து யுத்தஞ் செய்தான் இளைக்காமலே தானே
எத்தனையோ பலமுள்ள வனாம்.

126. வல்லப னொருவனை வாயுசுதன் பார்த்து
வையகத் திலவன் மிண்ட னென்று
மல்லயுத்தஞ் செய்தார் மகத்தான கோரமாய்
மாருதி யையவன் மீறி விட்டான்.

127. அதன்பிறகு மிகஅனுமா னாலோ சித்தான்
ஆரோ யிந்த சூரன் நாமறியோம்
மிதமீறி பலமுள்ளோன் மிகவுந் துணிவுள்ளோன்
மேதினி யிலிவன் வல்லபனே.

128. நம்மை மீறுகிறான் நாடித் தடுக்கிறான்
நமது மனமிவன் விஷயத்திலே
சம்மத மேயில்லை சண்டை செய்வதற்கு
சம்பந்த மேதோ விருக்கு மென்று.

129. நினைத்ததன் பேரிலே நேசத்தோடு தானே
நீயா ரென்று அந்த வாலிபனை
கனப்படுத்திக் கேட்பார் கவிவீரர் மாருதி
காலோ சிதமாக வாலோ சித்து.

130. பேரென்ன ? ஊரென்ன ? பெற்றவர் பேரென்ன ?
பெருமை யுள்ள சிறுபிள்ளை யேநீ
ஆரடா சொல்வாயென் றனுமார் கேட்கவவன்
அந்தச் சேதிசொல்ல அவசிய மில்லை.

131. குலகோத் ராதிகேட்டு கொஞ்சுவதற்கு இங்கு
கூடாது போர்செய்வா யென்று ரைத்தான்
பலவானி வனைநாம் பலவந்திக் காமலே
பட்சங்கொண்டு பின்னுங் கேட்போ மென்று

132. நயமாக வேசில நன்மொழிகள் சொல்லி
நானறிந்து கொள்ள சொல்வா யென்று
பயந்த வனைப்போல பலமுறை கேட்கவே
பட்ச முடனே அச்சிறுவன்.

133. சொல்லுகிறான் வாயு சுதரைப் பார்த்துமிக
ஜோராகவே அவன் நேராகவே
வல்லபர் களுக்குள் வல்லப ராயுள்ள
வாயு புத்ரனனு மான்மகனாய்.

134. உதித்துவந் தேனந்த உண்மையெல்லாங் கேளாய்
உத்தமரவர் ராம பக்தனாகி
மதியுட னேயந்த மாதவ னுக்காக
மனமு வந்துமிக முயற்சி செய்யும்.

135. அதிகபுத்தி சாலி அனுமாரென் தந்தையே
அரணுவத் தையவர் தாண்டு கையில்
உதித்த வேர்வை தனை யுத்ரதி மிதைதான்
உண்டு ஜனித்தே னுருவெடுத்து

136. எங்கும் பரவி ஏகமா யேயுள்ள
என்பாட்டேன் வாயுதேவ னெடுத்து
கங்குகரை யில்லா காங்ட்சையொ டென்னைத்தான்
கட்டி முத்தமிட்டுத் தட்டித் தந்து.

137. நெஞ்சிரக் கத்தோடு கொஞ்சிக் குலாவி
நேசங் கொண்டே யென்னை யனுக்கிரகித்து
அஞ்சி வணங்காம லாரையும் வென்றிட
ஐயன்பலத் தையும் மீறும்படி

138. வல்லமையைத் தந்து வாயுதேவர் போனார்
வணக்க வோடுக்க மில்லா மலேநான்
உல்லாசமாய்க் கடலோர ந்தனில் நிற்க
உற்றென்னைப் பார்த்து மைரா வணன்றான்.

139. வேண்டிக் கொண்டானவன் வெகுவாகவே யென்னை
வினயத் தோடு கூட அவனிடத்து
ஈண்டி வருமவன் எதிரிகளை யெல்லாம்
எதிர்த்துத் தடுத்திட வேண்டு மென்று.

140. அந்தப் படியே ஆகட்டு மென்றுநான்
அவனிஷடப் படிவாக்கு தந்து வந்து
இந்த விடந்தனில் இருக்கின்றே னெந்தன்பேர்
இசைந்த மச்சிய வல்ல பன்னென்பரே.

141. என்று சொல்லக்கேட்டு என்மக னோடுநான்
எதிர்த்து யுத்தஞ் செய்ய நேர்ந்ததென்று
கன்றிடிந் தபசு கதறுவது போல
கதறி கண்ணீர் விட்டான் கபியனுமான்.

142. கிணறு வெட்டபூதம் கிளம்புவது போல்
கெடித்ததெ யென்று மயங்கி னேனே
குணமுள்ள மகனாகக் கூட்டித்தந் ததுதெய்வம்
குறைவில்லை நமக்கினி என்றனுமான்.

143. தன்னில் மகிழ்ந்தான் தாராட்டவும் வந்தான்
தனயனைத் தழுவியே முத்த மிட்டான்
என்னுடைய பாக்யம் எவர்க்குமிலை யென்று
எண்ணியெண்ணி மிகக்கூத் தாடினான்.

144. மச்சிய வல்லபன் மாருதியைப் பார்த்து
மயங்கியி வராரோ அறியே னென்று
அச்சங்கொண்(டு) கேட்டான் ஐயாநீ ராரென்று
அனுமா ரதற்குப் பதிலு ரைப்பார்.

145. என்மகனே நான்என்ன சொல்வே னப்பா
என்னை யனுமா னென்பாருலகில்
உன்பலத்தைக் கண்டு உள்ள மகிழ்ந்தாலும்
உன்னோடு யுத்தக் செய்ய நேரிட்ட

146. அந்தக் குறையெண்ணில் ஆவி நோகுதப்பா
அடித்தே னுன்னை மிகக்கடித் தேனப்பா
இந்த வனியாயம் எங்குமிலையென்று
எண்ணிமிக மனம் வாடு கிறேன்.

147. பெற்று வளர்த்து பெருமை செய்பவரே
பேத மெண்ணிமிகக் கொடுமை செய்தால்
குற்ற மென்பாரே குவலயத் திலாரும்
குணங்கெட் டுன்னோடு நான்போர் புரிந்தேன்.

148. அப்பனு மக்களும் அடித்துக்கொள் வதுண்டோ?
அகிலந் தனிலதை யொப்பு வுண்டோ?
தப்பிமாகுமே தண்டனைக்கிடமாமே
தகாத காரியத்ததைச் செய்தே னென்று.

149. பரிதபிக்கக் கண்டு பாபம றியாத
பரிசுத் தமச்சிய வல்ல பன்றான்
உரிய சுவரூப உடலைக்காட் டுமென்று
உரைத்தா னந்தப்படி யுண்மை யாக.

150. விசுவரூ பத்தோடு விளங்கினார் மாருதி
வெகுவா கவேமகன் மனமகிழ்ந்து
எசஸனடந்தவரே என்னைப் பெற்றவரே
என்னசொல் வேனுமம் மகிமைதனை.

151. தந்தையைக் காணவே தாக மிகவுண்டு
தயவுடனே வந்து காட்சி தந்தீர்
வந்தவுட னும்மை வருத்திவிட் டேனையா
வாஸ்தவந் தன்னைய றியா மலே.

152. தந்தை மனப்படி தவராமல் நடப்பது
தனயனுக்கு முக்கிய தரும மையா
அந்தநியா யந்தனை அறிந்தறிந்து மிப்போ
அநியாயஞ் செய்தே னறியா மலே.

153. பிழைபொறுத் தென்மீது பிரேமை கொள்ளுமையா
பேதை புத்தியினால் நீதி கெட்டேன்
குழந்தை செய்ததற்கு கோபிக் கலாகுமோ?
குணமா யனுக்கிரசித்தா தரிப்பீர்.

154. இங்குவந்த காரியம் எத்தனைச் சொல்வீர்
என்னா லுதவி யேதா கிலுந்தான்
உங்களிஷ் டப்படி உழைக்க வேண்டுமாயின்
உள்ள முவந்து உரையு மென்றான்.

155. அரக்கன் மைராவண்ணன் அக்கரமங் களெல்லாம்
ஆதியோ டந்தமா யனுமான் சொல்ல
சரியா யெல்லாங் கேட்டு சமபுத்தியைக் கொண்டு
சத்தயத் திற்கவன் கட்டுப் பட்டு

156. தந்தை காரியத்தைத் தடுப்போ மானாவது
தப்பித மாக முடிந்திடுமே
தந்தைக் கிடந்தந்தால் முந்தித்தந்த வாக்கு
தப்பிதமா யிற்றென் பானரக்கன்.

157. ஐயன் வழி கொண்டால் அரக்கன் மமைநோகும்
அரக்கன் பக்கஞ் சேர்ந்தால் ஐயன்நோவான்
கைபலத்தை யிப்போ காட்டுதற் கில்லையே
கடவுளரே யும்மை நம்பி யுள்ள.

158. என்னைக் குறைசொல்ல ஏதுவில் லாமலே
என்பை் பாதுகாக்க வேண்டு மென்று
தன்னில் மிகக்கோரி தன்னை மறந்தான்
தருணமிது நல்ல தருண மென்று.

159. மகனை யெடுத்து மடிதனிலே வைத்து
மனுமுவந்து முத்தம் தந்த தன்மேல்
வகையுட னேயந்த வாலிபனை யொரு
வாஸஸ் தலந்தனில் ஜாக்கிர தையாய்.

160. ஏதுமி டரின்றி இருக்கும்படி வைத்து
எண்ணியந்த விடந்தன்னை விட்டு
நாதன் றனைக் காண நாடியனுமான்
நடந்தான் வேகமாக தடத்தைக் கொண்டு.

161. போகையிலங் கங்கு புதுமை யாகப்பல
பொன்கோட்டை வெங்கல கோட்டைகளும்
மேக மண்டலத்தை மீறியுள்ள கோட்டை
மிகவு மிருக்க அவைக ளிலே.

162. கோடானு கோடியாய் கூடியிருந் தார்கள்
கொடிய ராக்கர் படைகள் மிக
தேடியோடி வந்து தீங்கு செய்வே னென்றார்
திர்ணமாகவே யந்த அரக்கர்களை

163. அடித்து நொருக்கி யதமாக்கி விட்டு
அங்கிருந் தேகினான் அனுமா னப்பால்
தடுப்ப வருமில்லை அடுப்பவரு மில்லை
தாரளமாய்ப் போனார் தடந்த னிலே.

164. அரக்க னிடவொரு அழகான வனமொன்று
அங்கிருக் கக்கண் டனு மானதில்
இருந்தினிமேல்ச்செய்வ தென்னவென்று தன்னில்
எண்ணியா லோசிக்கும் வேளை யிலே

165. வந்துசேர்ந் தாளொரு சிந்தை நொந்தபெண்
வாயு சுதனந்தப் பெண்ணைக் கண்டு
அந்தமுள் ளவொரு ஆலமரத் தின்மேல்
ஆரு மறியா திருந்து கொண்டார்.

166. வந்தப்பெண் ணங்குள்ள வைரப்படி கட்டி
வயணமா யிருக்கின்ற வனக்குளத்தின்
அந்தமுள் ளபடிக் கட்டி லிருந்து
அவள்குறைகள் சொல்லி முறையி டுவாள்.

167. எத்தனை நாளாய் இம்சைப் படுவேன்
என்னையா தரிப்போ ராரு மில்லை
சித்தம் வருந்திசிர மப்பட்டது போதும்
சீக்கிர மாயுயிர் விடுவதுவே.

168. அனுகூல மென்று ஆலோசித் துப்பின்னும்
அலறிய ழுகின்றா ளிவ்விதமாய்
அனைத்துக்கு மாதார மாகவுள் ளவராம்
அரும்பொருள் ராம லட்சு மணரை.

169. பலிகொடுப் பேனென்று பாதகனா மண்ணன்
பண்ணும் பத்ரகாளி பூஜைக் காக
ஜலங்கொண்டு வந்திட சண்டாளன் சொன்னானே
சகிக்க வுண்டோ யிந்த பாதகத்தை.

170. செய்யுங் கொடுமைக்குச் சேர்ந்துதவி செய்ய
சித்தந் துணிவில்லை யென்ன செய்வேன்
வையகத்தில் ராமன் வாழ்வுமிவ் வாறாமோ?
வந்த கஷ்டங்களை யொழிப்பவராம்.

171. அனுமாரென்(று) சொல்லும் அவர்வந்தா லும்போதும்
அந்தமகா புண்ய வானு மில்லை
ஜனங்களாரு மில்லை சீதா பதிதனை
சீராய் காப்பாற் றுவோரெவ ருமில்லை.

172. என்னசெய் வேனென் றிவ்விதங் குறைசொல்லி
ஏகாந்தமாய் கண்ணில் தாரை விட்டாள்
அன்னபட்சி போன்ற அவள்வாக்கைக் கேட்டு
ஆரோ யிவளென் றனுமா னெண்ணி.

173. அந்த தூர்தண்டியின் அருகில் வந்து நின்று
ஆரம்மா நீயென்று அனுமான் கேட்க
இந்த குரங்கேது? இங்கு வந்ததேது?
இந்தச் சேதியண்ணன் கண்டு கொண்டால்.

174. கொடுமை மிகச்செய்வான் கொன்றிடு வானம்மை
குறித்து விவரமே துமறியோம்
அடுத்த குரங்கையே ஆரென்று கேட்போமென்
றனு மானைப் பார்த்தந்த அரக்கி கேட்பாள்.

175. குரங்கேயுன் பேரென்ன? குறித்து வந்ததென்ன?
கூலங்கிர்ஷ் மாகச் சொல்லா யென்றாள்
பரமாத்மா வாகிய பரந்தாமன் ஸ்ரீராமன்
பக்தன னுமான னென்று ரைத்தான்.

176. நம்பிக்கைக் கொள்ள நல்லதிர்ஷ் டாந்தம்
நானறியச் செய்யு மென்று கேட்டாள்
கும்பிட்டு ராமனைக் கோரி விசுவரூபம்
கொண்டு நின்றானனு மானண் டம்போல்.

177. கண்டு பயந்து கண்கள் மூடிக்கொண்ட
கண்டே னையா வும்மமகிமை யெல்லாம்
தண்டித்த ரக்கனை தயவுடனே யென்னை
தரும மாக ஆத ரிப்பீ ரென்று.

178. மிகவுமவள் கோர மிரள வேண்டாம் பெண்ணே
மேன்மை தருவே னுனைக்காப்பேன்
அகத்துணிந்தென்னோடு அனைத்தையுஞ் சொல்லுவாய்
அரக்கனுக் காகநீ அஞ்ச வேண்டாம்.

179. என்றுரைத்து சிறுகுரங் காகவே நின்றான்
இவனாலே கஷ்ட மொழியு மென்றும்
என்றுங் குறைவின்றி இன்பமுண்டா மென்றும்
எண்ணி யந்த அரக்கி களித்து.

180. அனுமானப் பார்த்து அன்புட னேமிக
ஆசை கொண்டு ரைக்கின்றாள் இவ்விதமாய்
கனவானே யனுமானே கேளுமையா சொல்வேன்
காதலன் செய்கையை விவர மாக.

181. அரக்கன் மைராவணன் அண்ணன வனென்னை
அன்புட னேமிக வாதரித்து
பரம யோக்யரான காலதத் தருக்கு
பாங்குடனே யென்னை மணம்புரிந்து.

182. தந்து மிகவும் தயவுடனே யவன்
தம்பதிகளைக் காப்பாற்றி வந்தான்
சிந்தை மகிழ்ந்துநான் சீராகவே வாழ்ந்தேன்
சிலாக்ய முள்ளவொரு புத்திரனை.

183. பெற்றெடுத் துமிகப் பெருமை யடைந்தேன்
பிறியமா யெந்தன் குழந்தைதனை
உற்றபடி யண்ணன் உறவு கொண்டாடியே
உள்ள மகிழ்ந்தான் ஆதரித்தான்.

184. அண்ணன் மகளான ரூபா வதியை
அந்தக் குழந்தைக் குத்தந்திடவே
எண்ணங்கொண் டானண்ணன் இவ்வாறிருக் கையில்
எம்மகனே யிந்த லங்கைதனை.

185. அரசாளுவா னென்று அசரீர வாக்கொன்று
அண்ணன் காதில் கேட்க வுண்டாயிற்(று)
பரபரப்புக் கொண்டு பாதகனா மண்ணன்
பர்த்தா வான் எந்தன் பிராணேசரை.

186. எதிரிலவன் கண்டு எடுத்துவாலைக் கொண்டு
ஏதுந்தய வின்றி கொன்று விட்டு
அதிக கோபத்தோடு அருமையான எந்தன்
அழகுள்ள மகனில மேகன்றனை.

187. வதைபுரிய வந்தான் வணங்கிய வனைநான்
வாய்விட்டுக் கதறி மிகவும் கேட்க
சதிகார னென்னையும் சத்புத் தரனையும்
சங்கடப் படவே சிறையில் வைத்தான்.

188. நாலாறு வருஷமாய் நாங்கள் சிறையிலே
நானாவித கஷ்ட மடைகின் றோமே
காலாதீ தமாக கண்தாரை விடுகிறோம்
காக்கும் பிர்புக்க ளாரு மின்றியே.

189. ஜயித்தவனை வெல்ல ஜகத்திலா ருமில்லை
சிவனே கதியென் றிருக்கு மெங்கள்
பயத்தை யொழித்து பரிபாலனஞ் செய்ய
பாதம் பணிகின் றேனென் றழுது.

190. தசகண்டன் ராவணன் தனக்காக அண்ணனை
தஸ்கரித்து ராம லட்சு மணரை
வசப்படுத் திவர வஞ்சகஞ் செய்திட
வரவழைத்துச் சொன்ன படிபோகியே.

191. கொண்டு வந்துகாளி கோவிலிலே வைத்து
கொன்று பலிதர வென்னை யிப்போ
கொண்டுவரச் சொன்னான் கும்பத்திலே ஜலம்
கோவிலா ராதனை செய்வ தற்கு.

192. இந்த ஜலங்கொண்டு இங்கிருந்து போனால்
இப்பொழுதே ராம லட்சு மணரை
அந்தப்பாவி கொல்வான் ஆகையி னாலேநீர்
அதிரக சியமா யங்கு சென்று

193. எடுத்தந்த விருவரை எங்காயினும் வைத்து
இரட்சிக்க வேண்டு மதன்பிறகு
அடுத்தென் னுடைய அண்ணனையும் வென்று
ஆதரிக்க வேண்டும் பின்னுங் கேளீர்.

194. இங்கிருந்து தானே இலங்கை போவதற்கு
இருக்கின்ற மார்க்கத்தி லிடரொன்றுண்டு
அங்கு துலாயந்தரம் அதைக்கடக்கும் போது
அந்தரங் கந்தனைக் காட்டுமது.

195. அரக்கர் காவலங் கநேகமாக வுண்டு
அவருடனே போர் புரிய வேண்டும்
துரிதமாயே யந்த துரோகிகளை வென்று
துணிந்து லங்கை நகர் சேரவேண்டும்.

196. ஆகையி னாலே ஆலோசித்துச் செய்யும்
அனுமானே யென்றவள் சொன்ன தன்மேல்
தேகம் ஈபோல் கொண்டு தெரியா மலுன்னிட
தீர்த்தக் குடந்தனி லிருந்து கொண்டு

197. வருவே னென்று சொல்லிவா யுசுதனந்த
பகையாகவே வந்தான் வழிதனிலே
குறித்த யந்திரத்தின் குணத்தினாலே வந்த
கூறறிந்து காவல்க் காரர் வந்து.

198. அரக்கி தூர்தண்டியை அதட்டி மிரட்டினார்
அனுமார் விசுவரூபங் கொண்டு வந்து
இருக்கிவாலைக் கொண்டு இம்சைமிகச் செய்து
எல்லோரும் அதமாக நொரிக்கி விட்டார்.

199. எல்லா அரக்கரும் ஏதுமிச்ச மின்றி
எமலோகந் தன்னை யடைந்து விட்டார்
உல்லாச மாகவே உளமகிழுந்து கொண்டு
உத்தேசித்து லங்கை வந்து சேர்ந்தார்.

200. காளி யாலயத்தைக் கண்ட னுமானதில்
கதவை யுடைத்துள்ளே புகுந்தவுடன்
காளியோட்ட மிட்டாள் காளிபிம்பத் தண்டை
கண்டெடுத் தாரொரு பெட்டி தனை.

201. திறந்து பார்க்கையில் திருமகள் புருஷனும்
திருவாளன் தம்பியு மிருக்கக் கண்டு
உறங்கு மவர்கட்கு ஒருகுறையு மின்றி
உண்மையாகக் காக்க உள்ளங் கொண்டு.

202. பூமி தேவியிடம் போத முன்னோர் வந்து
பொருப்புடன் பெட்டியை வைத்திருக்க
ஷேம மெண்ணித் தந்தார் சீதையின் தாயதை
சீருடனே வாங்கி வைத்துக் கொண்டாள்.

203. அதன்பிறகு வந்து அட்டகாசஞ் செய்து
அரக்கர்களைப் போர்க் கழைத்து நின்று
கதியின் றியேமிக கஷ்டப் படுகின்ற
மதியுள்ள நீலமே கனிருக்கும்.

204. சிறைச் சாலைக்கு வந்து சீலமுள்ள அந்த
சிறுவனைக் காப்பாற்ற சித்தங் கொண்டு
அறைக்குக் காவலுள்ள அரக்கர்களை யெல்லாம்
அடித்த தஞ்செய்து அறைக்குள் சென்று.

205. பரிதபிக்கு மந்த பாலகன் கால்கட்கு
பாதகன் மைராவ ணன்தரித்த
இரும்பு விலங்குள் இரண்டையும் வாங்கியே
இரக்கமிகக் கொண்டு இட்டுக் கொண்டு.

206. அவனுமவன் தாயும் அகமகிழச் செய்து
அவர்களை யோர்புறந் தன்னில் வைத்து
எவரெதித்துருவ வார்களோ பாப்போமென்
றெண்ணிய னுமார் துணிந்திருந்தார்.

207. காவற் காரெல்லாம் கண்டோடியே வந்து
கழுதைப் பிடித்துத் தள்ளுங்க ளென்றார்.
சேவகத்தைக் காட்ட வந்தீர்களோ வென்று
சிடத்த முகங்கொண் டடித்திடவே.

208. அதமான பேர்க ளநேகமுண் டவர்களில்
அலறி யோடினபேர் சிலரு முண்டு
இதஞ்செய்யவே யெண்ணி இந்தப்பாவிகள் போய்
இலங்கேசன் கேட்க முறையிட் டார்கள்.

209. பத்தினியைக் கட்டி முத்தமிட்டுக் கொண்டு
பள்ளி யறையில் படுத்திருந்த
புத்திகெட்டமை ராவணன் கேட்டுக் கண்
பொரிபறக்க கோபங் கொண் டெழுந்தான்.

210. அந்தவுடன் காளி ஆலயமே போனான்
அந்தக் காளிதனை அவன் பார்த்தான்
முந்தியிருந்த களையில்லாமற் காளி
மூடமாகப் பிம்பம் இருக்கக் கண்டான்.

211. பொட்டி வைத்தவிடம் சுட்டிப்போ யேபார்த்தான்
பெட்டியைக் காணாமல் பிரமித்து நின்றான்
தட்டிக்கொண்டு போனான் தலையில் கல்லைப் போட்டு
தைரிய மாயனு மானென் றெண்ணி.

212. சேனைகளைச் சேர்த்து செய்வோம் யுத்தமென்று
சீக்கிரமாயவ னோடி வந்து
ஆனமட் டுமனு மானை யெதிர்த்தவன்
அமர்புரிந் தான்வெகு கோரமாக.

213. எடுத்துவிட்டான் பாணம் எண்ணத் தொலையாமல்
எத்தனை யோகட்கு கட்டாகவே
தடுத்தவை களெல்லாம் தவிடுபொடி செய்து
தானவர் கூட்டத்தில் பூந்தனுமான்.

214. புளியம் பழங்களை புடைத்துதிர்ப் பதுபோல்
போக்கி விட்டார் அரக்கர் சேனையை
அழிந்து போனவ ரநேக கோடியுண்டு
அதைக்கண் டரக்கன் மிகக்கடிந்து.

215. எதிர்த்து வந்தானவன் இடுப்பில் வாலைச்சுற்றி
இழுத்திழுத் துமிக அலைத்த தன்மேல்
மதிகெட்ட மூடனை மண்டை சிதறவே
மண்ணலிடு தேங்காய் போலடித்தார்.

216. சுக்கு சுக்காகவே பக்கங்களி லெல்லாம்
சூரன ரக்கன் தேகஞ் சிதறி
திக்கெங்கு மேவிழ தேறியவன் தேகம்
திரும்பவுமுயிர் கொண்டெழுந்து வந்து.

217. அகங்கரித்து நிற்கு அனுமான் கண்டுமிக
ஆச்சரியங் கொண்டா லோசித்து
மகிமை யிவன் மர்மமறி தற்கு
மார்க்கமென்ன வென்று கவலை கொண்டு.

218. எத்தனையோ தரம்இழுத்த வனைக்கொன்றார்
எழுந்து மறுபடி வந்திடுவான்
செத்துப் பிழைப்பவர் ஜெகத்திலெங்கு முண்டோ?
செய்வதி னியென்ன வென் றனுமான்.

219. சிந்திக்கும் வேளையில் சீக்கிர மாகவே
சிக்காம லரக்கண் மறைந்து கொண்டு
அந்தரங் கமாக அரிய வீரணமாம்
அந்த யாகமொன்று அனுசரிக்க.

200. ஆலமரத் தடியங் குள்ள அரங்கத்தில்
ஆரம்பித்து யாகஞ் செய்கையிலே
கோலம் விகாரமாய்க் கொண்டொரு பூதந்தான்
குண்டந் தனிலிருள் தேயுதித்து.

221. என்னை யழைத்த ஏதுவைச் சொல்லுவாய்
என்றந்த பூதங் கேட்க வரக்கன்
தன்னைக் கொல்லவரும் தாஷ்டிக வனுமானை
தண்டித்த தஞ்செய்ய வேண்டு மென்றான்.

222. ஒட்டமாக பூதம் தேட்டங் கொண்டு வந்து
உக்கிரமாக அனு மானெதிரில்
ஆட்டங் கொண்டு நின்றகோ ரமாகமிக
அமர்புரியவே அடுத்துதம்மா.

223. எட்டிப் பிடித்திட ஏட்டாமலே யோடும்
எமனுக்கெமன் போல இம்சை செய்யும்
கட்டிப் பிடிக்கும் கதற வடிக்கும்
கண்டதில் லையந்த பூதம் போல.

224. வாலைப் பிடிக்கும் காலைத் தடுக்கும்
வஞ்சகஞ் செய்து கொஞ்ச வரும்
தூலமாகக் காணும் தோற்றாமலும் போகும்
துள்ளும்படி வெகுதுடுக்குச் செய்யும்.

225. அண்டத்தை யாட்டும் அனுமானை யவ்விதம்
அநேக விதமாக அகம்வருத்தி
துண்டத் தனமாக தொந்தரை செய்தது
துலங்கி வந்த அந்த பூதமம்மா.

226. சலியா மலேவெகு சாமர்த்திய மாகவே
சண்டை செய்தார் அனுமாருந் தானே
பலவித மாகவே பண்ணிய யுத்தத்தை
பார்த்தவரெல் லாம்பயப் படுவார்.

227. போர்செய்யும் வேளையில் புத்தி மயங்கியே
பொல்லாத பூதமிதை ஜயிக்க
ஆர்திர மென்று அனுமான்மிக வஞ்சி
அரக்கன் யாக குண்டங் கண்டறிந்து.

228. அதையழித்து யாகந் தன்னைக் கெடுத்தான்
அந்த பூதம் மறைந்து போயிற்று
இதையுங் கெடுத்தாயோ வென்றரக்கன் சொல்லி
எதிரில் காணாமலே மறைந்து கொண்டு.

229. அலைக்கழித் தானவன் அனுமா ரைமிக
அவனை மறுபடி யடையு முன்னே
நலங்கூறுந் தூர்தண்டி நாடிவந்தனு மாரை
நயந்து சொல்வா ளிந்த விதமாகவே.

230. அரக்கன்பஞ் சப்பிராணன் அவனுக்குள் ளேயில்லை
ஐந்து வண்டு ரூபங் கொண்டவைகள்
பெரியமலை விந்தி யாசலந் தன்னிலே
பிரிந்திருக்கு மைந்து குகைகளிலே.

231. இருக்குதையா அந்த எல்லா வண்டுகளை
ஏககாலந் தனிலெடுத்துக் கொண்டு
அரக்கனைக் காலில் அமிழ்த்திக் கொண்டேநீர்
அந்த வண்டுகளை அழித்தெறிந்து.

232. அவன்மாரைப் பிளந்தக்கால் ஆவியொ ழிந்தவன்
அதமா வானென்றவள் சொல்லக் கேட்டு
விவர மறிந்தேன் வென்றிடு வேனென்று
விரைவாக வேயனு மான்வரவே.

233. எதிரில ரக்கன் இருக்கக் கண் டனுமான்
எட்டிவாலைக் கொண்டு கட்டிக் கீழே
மதமழியம் போட்டு மர்த்தனமுஞ் செய்து
மாரிலொரு காலை வைத்துக் கொண்டு.

234. விந்தியாசலத் தின்மேல் வேறொரு கால்வைத்து
விரித்து ரைத்த ஐந்து வண்டுகளை
சந்தில் கையைவிட்டு சுவாதீன மானமேல்
சக்கை யாக அந்த வண்டுகளை.

235. கசக்கி யழித்து காதகன் மாரிலே
கையை முஷ்டி கொண்டு கடிந்திடித்தார்.
இசுவெடுத் துமிக இம்சை யடைந்து
எமபுரி யையவன் அடையு முன்னே.

236. அந்தமை ராவணன் அனுமாரைப் பார்த்து
அறியாமல் பிழைசெய் தேன்அகங் கொழுத்து
எந்தன் மீதுகுறை யெத்தனையோ வுண்டு
இரக்கங் கொண்டென் மீதுகருணை கொள்வீர்.

237. உத்தமியா மெந்தன் பத்தினியுஞ் சொன்னாள்
உதாசீ னஞ்செய்து உதரி விட்டேன்
பத்தினி வாக்குப் பலித்துதையா விப்போ
பரமார்த்தமா யுள்ள வாக்கதுவே.

238. இந்தவிதஞ் சொல்ல அந்தபத் னிவந்து
என்வார்த் தையை மீறிச் செய்தபலன்
வந்துதே யிவ்விதம் வாழ்வை யிழ்ந்தேனே
வையத் தினாசை விட்டொ ழித்தேன்.

239. பிரிந்துபோ கின்றீரே பிராணேசரே யும்மை
பின்றொடர்ந் துவர ஆஞ்ஞை தாரும்
பரிதபிக்கு மென்னைப் பரித்தியாகஞ் செய்வது
பாரில பகீர்த்திக் கிடமாகுமே.

240. சககமனஞ் செய்து சாமியும் மோடே நான்
சரியாக பரகதி தனைய டைவேன்
மகிமை யதிலுண்டு மனச்சுக முமுண்டு
மனமுவந் தென்னை யழைத்துக் கொள்ளும்.

241. இந்த விதமாக எண்ணிப்பிர லாபித்தாள்
எத்தனையோ ஆருத லுரைத்து
சிந்தை வெறுத்து நீ செப்பினதைக் கேட்டேன்
செப்புமெந்தன் வாக்கை செவியில் கொள்வாய்.

242. கன்னிகையைப் பெற்று கல்யாணஞ் செய்யாமல்
கண்மூடி இருவரும் போவோ மானால்
கன்னிகை மனம்வாடி கண்ணீர் சொரியுமே
காலோசி தங்கண்டு காரியஞ் செய்வாய்.

243. பரிதபிக்க வேண்டாம் பத்தினியே கேளாய்
பரம யோக்யன் நீல மேகனடி
தரும விதிப்படி தப்பாமல் நடப்பவன்
தந்துவிடுநாம் பெண்ணை யவன்.

244. மணம்புரிந்து கொண்டுமகி மையாக வாழ்வான்
மாருதி யாலவன் மகுடம் பெற்று
குணமுடனேயிந்த குவலயத்தை யாள்வான்
குறையெல் லாமவ னாலே தீருமடி.

245. இந்தவிதஞ் சொல்லி நீலமேக னையும்
இளையவள் தூர்தண்டி தன்னை யுந்தான்
அந்த மைரவாணன் அருகழைத்துச் சொல்வான்
அன்யாய முங்களைச் செய்து விட்டேன்.

251. ஆகம விதிப்படி அரக்கன் தேகந்தனை
அடக்கஞ் செய்துகதி தந்த தன்மேல்
போகபாக் யத்தோடு பூமிபட் டந்தனை
பொறுப்புடனே நீல மேகனுக்கு.

252. கட்டி ரூபாவதி கல்யாணமுஞ் செய்து
கனம் பெற்றனுமா ரதன்பிறகு
அட்டியினிச் செய்ய லாகாதென் றேயெண்ணி
அங்கிருந் துடனே பிரயா ணமாகி.

253. வந்து பூமிதேவி வைத்திருக்கும் பெட்டி
வாங்கிக் கொண்டு மச்சிய வல்லபனை
அந்தவுடன் வந்து அனுமான் பார்க்க அவன்
ஆயாசந் தீர்ந்து தெளிந்தெ ழுந்தான்.

254. தந்தை தனையவன் தலைவணங்கி நின்று
தானவன் கதியையும் கேட்ட றிந்து
சிந்தை மகிழ்ந்து ஸ்ரீ ராமனை யுங்கண்டு
செப்பு கிறான் தந்தைக் கிப்படியே.

255. வருவேனையா நானும் வானரர் கூட்டத்தில்
வசித்துக் கொண்டு காலம் கழிப்பேனன்றி
இருக்காமாட் டேனும்மை இமைப்பொழுதும் விட்டு
என்னையுங் கூட அழைத்துக் கொண்டு.

256. போக வேண்டுமென்று புத்திரன் கோரவும்
போதமுள்ள அனுமார் மிகவும்
தாகங் கொண்டு கோரும் தன்மகனைப் பார்த்து
தயவுடனே வெகுவித மாகவே.

257. பாதாள லங்கையைப் பாதுகாக் கும்படி
பரிந்து பதேசித்தார் இருந்திடவே
வாதாடி யேமகன் வந்திடுவே னென்று
வாக்கிலு ரைத்துக் கண்ணீர் சொரிந்தான்.

258. அநேக விதமாக அனுமான் சொல்லிப் பார்த்தார்
அகமிக வேயவன் நொந்தழுதான்
இனியிவனுக்கு நாம் ஏதுஞ் சொல்லுதற்கு
இல்லை யிவனையு மிட்டுக் கொண்டு.

259. போகத் துணிந்தவர் ஆகட்டு மென்றதை
புத்திரன் கேட்டு மிகமகிழ்ந்தான்
வேகமாக அந்த விடத்தையிட் டிருவரும்
வெடியுமுன் லங்கையை அடைந்திடவே.

260. ஆகாச மார்க்கத்தில் அதிவேகமாய் வந்தார்.
அனுமார் வரவை எதிர்பார்த்து
தேகாபி மானத்தை விட்டு நான்குபுறம்
திரிந்து திரிந்தோடி வானரரும்.

261. விபீஷ ணருமாக விசனத்தோ டிருக்கையில்
வெடியுஞ் சமயந் தனிலனுமான்
சுபமென்று வாயாலே சொல்லிக் கொண் டுவந்தார்
சுபுத்திரன் அவரைப்பின் தொடர்ந்து வந்தான்.

262. வருங்கோலத் தைக்கண்டு வானராதி யெல்லாம்
வாயுசுதன் றன்னைப் புகழ்ந்து கொண்டு
அருமையான யெங்கள் அனுமார் வந்தாரென்று
அகமகிழ்ந்துமிக ஆடி னரே.

263. புத்திரனொடு பூமிதனில் வந்து
புண்ணியவான் அனு மான் குதித்தான்
உத்தமராம் ராம லட்சுமணர்களை
உறங்கவுள்ள பர்ன்ன சாலை தனில்

264. கொண்டுவந்து விடகுண முடனேயவர்
குறைவின்றி சுகமாக விழித்தெழுந்தார்.
கண்டு களித்தார்கள் கவிகளர்தி யெல்லாம்
கர்த்தனை விட்டோர் புறத்தில் வந்து.

265. அனைவர்களுங் கூடி அனுமாரைச் சூழ்ந்து
ஆதியோ டந்தமாய் சேதி கேட்டு
மனமகிழ்ந் ததோடு மச்சியவல் லபனாம்
மாருதி மகனைக்கண் டுமகிழ்ந்தார்.

266. தசகண்ட னிதைக்கேட்டு தன்னில் மிகவுமே
தத்தளித் தான்கண் தாரை விட்டான்
விசனஞ் சகிக்காமல் வெகுகஷ்டமும் பட்டான்
வேறுகதி யென்ன வென்ற முதான்.

267. அழியாத பாக்யங்கள் அழியும் படியாக
ஆயிற் றேதெய் வபலமி லையே
இழிவடைந் தோமென்று எவரும் நகைப்பாரே
என்னசெய் வோமென் றெண்ணி யப்பால்.

268. அதிகரோ சங்கொண்டான் அமர்புரி வோமென்று
ஆத்திர முங்கொண் டாலோ சித்தான்
சதிகார னாமவன் சண்டை செய்வதற்கு
தண்டெ டுத்து வந்தான் தயிரியமாய்.

269. சித்தந் துணிந்து யுத்தஞ் செய்துபாவி
ஸ்ரீராம னால்மிக சிரம மடைந்து
இத்தவத்தை விட்டான் ஈசன்பா தஞ்சேர்ந்தான்
என்றுங் குறைவில்லா கதியடைந்தான்.

270. வானவர் கண்டு மகிழ்ந்து புஷ்பமாரி
வகைவகை யாகவே வருஷித் தார்கள்
தீனரட் சகனாம் திருவாளன் ராமனை
திருமகளாம் சீதை சிறை நீங்கியே.

271. வந்தடைந் தாளம்மா சிந்தை மகிழ்ந்து
வானவர் முதலோர்கள் தானும் வந்து
இந்திரன் தசரதன் ஈசுவர னுமிக
இராமன் முதலோரை யனுக்கிர கித்தார்.

272. விபீஷணர்க்கு லங்கை பட்டந் தனைக்கட்டி
விரைவா யாவரும் விமான மேறி
சுபம் பெருகு மிககோ பிதமா யுள்ள
சுகந்தரு மயோத்தி வந்து சேர்ந்தார்.

273. ஜகத்தை யெல்லா மாள ஸ்ரீராமனுக்கு
சீராக அபிஷேக முடிசூட்டினார்
அகமகிழ்ந் தாராகும் அந்த காட்சி கண்டு
அன்னை மார்கள் மிகஅனுக் கிரத்தார்.

274. இராமரா சாண்ட இராச்சியந் தன்னிலே
இராப்பகலும் பாக்யம் பெருகு மம்மா
தாராள மாய்ச்சுகம் தரணியோ டடைந்தார்கள்
தயாபர னரசு முறையே முறை.

275. ஸ்ரீ கிருஷ்ண பக்தனை சீருடனே காக்கும்
ஸ்ரீ ராமச் சந்திரன் வாழ்ந்திடவே
பிரீதியு டனிதை பிர பஞ்சந்தனில் சொல்லி
பெருமை பெற ஜகமெங்கும் வாழி.

ஸ்ரீராமச்சந்திர பரப் பிரம்மணே நம
மைராவணன் வதை முற்றும்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பாடல் முதற்குறிப்பு அகராதி

அகங்கரித்து	217	அரக்கர் மன்	16
அசந்து	70	அரக்கர் காவ	195
அசரீர	246	அரக்கி தூர்	198
அஞ்சவேண்டா	112	அரக்கன் மைரா	155
அடித்து	163	அரக்கன் மைரா	181
அண்ணன்	184	அரக்கன் பஞ்சப்	23(
அண்ட பித்தி	39	அரக்கனிடவொரு	164
அண்டத்தை	225	அரசாளுவானென்று	185
அதன்பிறகு	108	அலுத்தடங்கு	56
அதன் பிறகு	26	அலைக்கழித்	229
அதன் பிறகு	127	அவன் மாரைப்	232
அதன் பிறகு	203	அவனுமவன்	206
அதமான	208	அவனை	77
அதிக ரோஷங்	268	அவரைப்	53
அதிக புத்திசாலி	135	அழியாத	267
அதிவீர	125	அறியும் படி	13
அதுவுமல்	98	அனுமானெனும்	79
அதையழித்து	228	அனுமார்	75
அந்தவுடன்	210	அனுமாரென்று	171
அந்தமை	236	அனுமானென்	55
அந்த வாக்கைக்	82	அனுமாரமுகையில்107	
அந்தப் படியே	240	அனுமானதைக்	32
அந்த தூர்	173	அனுமான்	38
அந்தக் குறை	146	அனுகூல	168
அந்தியிலை	34	அனுமானைப்	180
அநேக	258	அனவைர்	265
அப்படியே33		அஷ்ட	46
அப்பனுமக்	148	ஆகம	251
அரக்கர்	10	ஆகாச	260

ஆகாய	67
ஆகாயங்	78
ஆகையி	29
ஆகையி	196
ஆலமரத்	220
ஆலோசனை	28
ஆவிவிட்ட	250
இங்கு வந்த	154
இங்கு நின்றா	87
இங்கிருந்து	194
இதுவுமன்றியிலே	119
இந்த ஜலங்	192
இந்த விதஞ்	6
இந்த விதஞ்	238
இந்த விதஞ்	245
இந்த விதமாக	241
இந்திரஜித்	1
இரக்கங்	64
இரவுதனில்	15
இராமலட்சு	71
இராம	274
இருக்கும் படி	84
இருக்குமந்த	115
இருக்குதையா	231
இன்றிரவு	21
இஷ்டப்படி	5
உண்டாயிற்று	76
உத்தமியா	237
உதித்து	134
உம்மைத்	44
உமது முகந்	9
உமதிஷ்டப	97
உள்ளே	72
உறுதிமிகச்	17
உனது	80
உன்னை	11
எச்சரிக்கை	85
எங்கும்பரவி	136
எட்டிப்பிடித்திட	223
எடுத்தந்த	193
எடுத்துவிட்டான்	213
எடுத்துக்கொண்டு	81
எத்தனையோ	105
எத்தனையோ	117
எத்தனையோ	218
எத்தனையோ	113
எத்தனை நாளாய்	167
எதிரிலவன்	186
எதிரிலரக்கரன்	233
எதிர்த்து	215
எந்த	31
எல்லையில்	103
எல்லா	199
என்மகனே	145
என்வர்க்	249
என்று	94
என்று	141
என்று ரைத்து	179
என்று சொல்லக்	248
என்ன	68

என்னசெய்	172
என்னை	8
என்னைப்	102
என்னைக்	158
என்னையழைத்த	221
ஏதுமிடரின்றி	160
ஐயன் வழி	157
ஐயனையுமவர்	27
ஒட்டமாக	222
கசக்கி	235
கட்டி	252
கண்டு பயந்து	177
கபடவேஷம்	93
கவலைப்பட	25
கன்னிகையைப்	242
கஷ்டம்	54
காலதே	52
காவற்	207
காளி	200
கிணறு வெட்டவும்	142
குரஙகே	175
குலுகோத்	131
கேடுவரு	43
கொண்டு	111
கொண்டு	191
கொண்டு	264
கொடுமை	174
கோட்டை	37
கோட்டை	116
கோடானு	162
சககமனஞ்	2
சத்துருக்	4
சதிசெய்தானந்த	1
சந்து	6
சமுத்திர	1
சலியாமலே	2
சற்றறிந்து	5
சித்தந்	2
சிந்திக்கும்	2
சிறைச்	2
சுக்கு	2
சுவாமிக்குந்	7
சூரிய	3
செய்திடு	2
செய்யுங்	17
சேனை	2
சொல்லுகிறான்	13
சொல்லி	2
சொல்வ	48
தசகண்ட	49
தசகண்ட	26
தசகண்டன்	19
தந்து	18
தந்தை	15
தந்தை	25
தந்தையைக்	151
தந்தை மனப்படி	152
தன்னில்	143
தன்னிலா	20
தாமரை	114

தமரத்	122
திருச்சடை	18
திறந்து	201
தெரியுமடா	86
நம்பிக்கை	73
நம்பிக்கைக்	176
நம்மைப்	90
நம்மை மீறு	128
நயமாக	132
நாலாறு	188
நாலுபுறந்	36
நிச்சயித்துச்	91
நினைத்த	129
நிஜரூபத்தைக்	88
நீலமேகனை	83
நெஞ்சிரக்கத்	137
நெஞ்சுதுடிக்க	42
நேத்தியது	96
பண்டிதனென்றும்	104
பத்தினி	209
பத்நியந்	59
பரிதபிக்கக்	149
பரிதபித்தான்	100
பரிதபிக்கு	205
பரிதபிக்க	243
பரிவாரங்	60
பரியாசங்	66
பலிகொடுப்	169
பாதந்தனில்	65
பாதாள	22
பாதாள	110
பாதாள	3
பாதாள	257
பிரிந்து	239
பிழை	153
புத்திர	263
புத்திரமித்	51
புகுந்து	123
புளியம்	214
பூமி	202
பெட்டிதனை	75
பெற்று வளர்த்து	147
பெற்றெடுத்	183
பேரென்ன	130
பொட்டி	211
போகவேண்டு	256
போகத்துணிந்	259
போகையிலங்	161
போர்	227
போனதெல்லா	14
போனதெல்லா	2
மகனை	159
மச்சிய வல்ல	144
மணம்	244
மந்திரி	40
மந்திரிகளொடு	7
மனக்கவலை	99
மனிதன்	45
மனதிலென்	247
மாங்கல்ய	57

மிகவுமவள் 178
மோசம் 101
வஞ்சக 89
வசிக்கும் 118
வந்தப் 166
வந்தடைந் 271
வந்து 165
வந்து 253
வந்து தடுத்124
வந்து பார்க்க 91
வதை 187
வர்ன்ன 41
வருங்கோலத்தைக் 262
வருவேனையா 255
வருவேனென்று 197
வல்லமை 138
வல்லபனொரு 126
வாலை 63
வாலைப் 224
வானவர் 270
விசுரூபத் 150
விந்தியா 234
விபீஷணர்19
விபீஷணர்க்கு 272
விபீஷணர்க்கு 261
விபீஷணரைப் 69
விளக்குப் 47
வெகு சூதறிந் 92
வென்று சுகந்தர 12
வேண்டி 139
றழுது
ஜகத்தை
ஜயித்தவனை
ஸ்ரீ கிருஷ்ண
ஸ்ரீ ராமச்
ஸ்ரீ ராமச்

அருஞ்சொற் பொருள் விளக்கம்

அந்தரங்	-	வெளி
அரவணத்தை	-	கோட்டைமதில்
ஆஞ்ஞை	-	கட்டளை
ஆலிங்கனஞ்	-	தழுவுகை
ஈஷத்தும்	-	அட்டமாசித்திகளுள் ஒன்று
உபத்ரவித்து விடும்	-	துன்பம், தொந்தரை
கபடமாக	-	வஞ்சகமாக
கபியனுமான்	-	குரங்கு அனுமான்
காங்ட்சையொடு	-	விருப்பம்
காதகன்	-	கொடியவன்
குவலயத்திலாரும்	-	பூமியில் ஆரும்
கும்பத்திலே	-	குடத்திலே
சககமனஞ்	-	இறந்த கணவனோடு உடன்கட்டை ஏறுவ
சடுதி	-	விரைவு
சபலமடா	-	நிலையற்ற உள்ளம்
சமுகியமே	-	சந்தேகமே
சருவிப்பிர்	-	முழுவதுமாக
சித்தம்	-	மனம்
சிலாக்யமுள்ள	-	புகழ் யுள்ள
சுபுத்திரன்	-	நன்மகன்
சுவானம்	-	நாய்
சுவாதீனத்தில்	-	சுதந்திரம்
சேவகத்தை	-	வீரத்தை

சோதரியாம்	-	உடன் பிறந்தவளாம்
சோகாதி	-	சோகம் பாவனை
சோபிதமாக	-	பிரகாசித்தல்
தசகண்டன்	-	இராவணன்
தயாபரனரசு	-	அருள் உள்ள கடவுள்
தாஷ்டிகம்	-	பலம்
திராணியின்றி	-	வல்லமையின்றி
திர்ணமாகவே	-	துரும்பாகவே
நேத்தி	-	முறை
பஞ்சப் பிராணன்	-	ஐந்து சுவாசத்தை நிகழ்விக்கும் வாயு
பரகதி	-	மோட்சம்
பர்ன்னசாலை	-	இலை வேய்ந்த குடில்
பிர்மித்து	-	சாமாதிக் கட்டிடம்
மமதை	-	செருக்கு
மர்த்னமுஞ்	-	பிசைகை
முஷ்டி	-	விரல் முடக்கிய கை
யத்தனங்கள்	-	எத்தனங்கள்
ரகு	-	சூரிய வம்சத்தரசருள் ஒருவன்
வாயுசுதன்	-	வாயு மகன்
விபரீதங்கள்	-	மாறுபாடு
வீட்சணித்தான்	-	பார்வை